**கவனிக்க.**-2021.04.30 ஆந்திகதிய 2226 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி IV (அ) மற்றும் பகுதி IV (ஆ) பிரசுரிக்கப்படவில்லை.

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2227 - 2021 මැයි මස 07 වැනි සිකුරාදා - 2021.05.07

*2227 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு மே மாதம் 07 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)

| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 1018 | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 1023 |

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலூன பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2021, மே மாதம் 28 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2021, மே மாதம் 13 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரனியல் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2021 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

1015-B 82228-5,403 (2021/ 05)

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரசாங்க சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிற பதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரசாங்க சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலுாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்க வேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுரத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரசாங்க சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரசாங்க சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரசாங்க சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த) தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரசாங்க சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிச் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரசாங்க சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரசாங்க சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரசாங்க சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரசாங்க சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவு செய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமையபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகளுக்கான விதிகளும் அறிவுறுத்தல்களும்

*1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் காலத்துக்குக்காலம் வெளியிடப்படுகின்ற சட்டங்களுக்கும் ஒழுங்குமுறைகளுக்கும் ஏற்ப ஒழுகுவதற்கு சகல பரீட்சார்த்திகளும் கட்டுப்பட்டவர்களாவர்.*

*1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கத் திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் 20 ஆம் வாசகத்தின் மூலம் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்துக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய கீழ்க் குறிப்பிடப்படும் நிபந்தனைகள் மற்றும் கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன.*

அனைத்துப் பரீட்சார்த்திகளும், கீழ்க் குறிப்பிடப்படும் விதிகளுக்கு கட்டுப்பட வேண்டும் என்பதுடன் இவ் விதிகளில் எவற்றையேனும் மீறும் பரீட்சார்த்தி ஒருவர் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் தீர்மானத்துக்கு அமைய கீழ்க் குறிப்பிடப்படும் தண்டனைகளில் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட தண்டனைகளுக்கு உட்படுத்தப்படுவார்.

I. விசாரணைக்கு உட்படுத்தப்படுகின்ற முழுப் பரீட்சைக்கும் அல்லது அதன் ஒரு பகுதிக்கு தோற்றுவதற்குத் தடை விதித்தல்;
II. விசாரணைக்கு உட்படுத்தப்படும் பரீட்சையின் ஒரு பாடத்திற்கு அல்லது மொத்தப் பரீட்சைக்கும் தகுதியற்றவர் ஆக்குதல்;
III. இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் நடாத்தப்படுகின்ற அனைத்துப் பரீட்சைகளுக்கும் தோற்றுவதற்கு வாழ்நாள் தடை விதித்தல்;
IV. குறிப்பிட்ட காலப் பகுதிக்கு இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படுகின்ற பரீட்சைகளில் தோற்றுவதற்குத் தடை விதித்தல்;
V. இடைநிறுத்தப்பட்ட, பரீட்சைக்கான தடை உடன் கடிதம் ஒன்றை வழங்குதல்;
VI. குறிப்பிட்ட காலப் பகுதிக்கு சான்றிதழ் தடை செய்யப்படல்;
VII. பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் கீழ் குற்றவியல் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்வதற்காக பரீட்சார்த்தியை காவற்றுறையிடம் ஒப்படைத்தல் அல்லது அக்குறித்த செயற்பாடு தொடர்பாக காவற்றுறையில் புகார் செய்தல்;
VIII. பரீட்சார்த்தி அரசாங்க ஊழியராக அமையும் சந்தர்ப்பத்தில் குறித்த பரீட்சார்த்தியின் செயற்பாடு தொடர்பாக (ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக) குறித்த பரீட்சார்த்தியின் நியமன அதிகாரிக்கு அறிவித்தல்.

பரீட்சைக்கு முன்பு, பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது அல்லது பரீட்சைக்கு பின்பு அல்லது வேறு எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் அவ்வாறான பரீட்சார்த்தி தொடர்பாக நடவடிக்கை எடுக்கும் அதிகாரத்தை பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், தம்வசம் கொண்டவர் ஆவார். இது தொடர்பாக அவரால் மேற்கொள்ளப்படும் தீர்மானம் இறுதியானதாகும்.

1. சகல பரீட்சார்த்திகளும் பரீட்சை மண்டபத்தினுள் மற்றும் பரீட்சை நடைபெறும் வளாகத்தினுள் பரீட்சை மேற்பார்வையாளருக்கு அவரது பணிக் குழாமுக்கு, அதே போன்று ஏனைய பரீட்சார்த்திகளுக்கு இடையூறு அல்லது தடங்கல்கள் ஏற்படாத வகையில் நடந்துகொள்ள வேண்டும். பரீட்சார்த்திகள் பரீட்சை வளாகத்தின் சொத்துகளுக்கு அல்லது பரீட்சை ஊழியர்களின் தனிப்பட்ட சொத்துகளுக்கு சேதம் ஏற்படுத்துதல் கூடாது.
2. பரீட்சார்த்திகள் பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் காலப் பகுதியிலும் பரீட்சை ஆரம்பிப்பதற்கு முன்பும் அதே போன்று பரீட்சை நடைபெற்று முடிவடைந்தவுடனும் பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழுவின் அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப நடந்து கொள்ளல் வேண்டும்.
3. பரீட்சையின் போது வினாப்பத்திரத்திற்கு விடையளிப்பது ஆரம்பிக்கப்பட்டு அரை மணித்தியாலம் கழிந்த பின்னர் எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திற்குள் அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும் பரீட்சை முடிவடையும் வரை எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கும் இடமளிக்கப்பட மாட்டாது. செயன்முறைப் பரீட்சைகள் அல்லது வாய்மொழி மூலமான பரீட்சைகளுக்கு உரிய நேரத்திற்கு சமுகம் அளிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
4. சகல பரீட்சார்த்திகளும் தமது சுட்டெண்ணுக்குரிய ஆசனம் தவிர்ந்த வேறு எந்த இடத்திலும் அமர்தல் கூடாது. பரீட்சை மேற்பார்வையாளரின் விசேட அனுமதி இன்றி தன்னுடைய இடத்தை மாற்றக் கூடாது. தனக்கு ஒதுக்கப்பட்ட ஆசனத்தைத் தவிர வேறு இடத்தில் அமர்தல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்பட நேரிடும்.
5. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி பேணப்பட வேண்டும். எக் காரணம் கொண்டும் பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சை மேற்பார்வை பணிக்குழுவில் உள்ள ஒருவரைத் தவிர பரீட்சை மண்டபத்தினுள் அல்லது வெளியே இருக்கும் எவர் ஒருவருடனும் எந்தவித காரணத்திற்காகவும் கதைத்தல் அல்லது தகவல் பரிமாறல் அல்லது வேறு எந்தவிதமான கொடுக்கல் வாங்கலிலும் ஈடுபடுதல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.
6. பரீட்சை சுட்டெண்ணை மட்டும் கொண்டே பரீட்சார்த்தியின் விடைத்தாள்கள் இனங்காணப்படுகின்றமையால் விடைத்தாளில் தன்னுடைய பெயரை எழுதுதல், விடைத்தாளை இனங்கண்டு கொள்ளக்கூடிய வகையில் ஏதேனும் குறியீடு அல்லது குறிப்பு இடுதல், விடைத்தாளில் அநாகரிகமான அல்லது அவசியமற்ற விடயங்களை எழுதுதல், விடைத்தாளுடன் நாணயத்தாள்களை இணைத்தல் ஆகியவை முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளன. மேலும் வேறு எவரேனும் பரீட்சார்த்தியின் சுட்டெண்ணை தன்னுடைய விடைத்தாளில் எழுதுதலும் மோசடி நடவடிக்கை ஒன்றைச் செய்வதற்கு முயன்றதாகக் கருதப்படும். இனங்கண்டு கொள்ள முடியாத வகையில் சுட்டெண் எழுதப்பட்ட விடைத்தாள்களும் நிராகரிக்கப்படும்;
7. உமக்கு பரீட்சை மண்டபத்தினுள் வழங்கப்படும் தாள்கள் (பரீட்சை நடைபெறும் திகதிக்குரிய நோக்குனரின் குறுகிய கையொப்பம் மற்றும் திகதி இடப்பட்ட விடை எழுதும் தாள்கள்) தவிர வினாத்தாளிலோ அல்லது மேசையிலோ அல்லது வேறு ஏதேனும் இடத்திலோ எவற்றையும் எழுதுதல் கூடாது. இந்த அறிவுறுத்தல்களுக்கு மாறாக செயற்படுதல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்படும்.
8. பரீட்சார்த்திக்கு வழங்கப்படுகின்ற தாள்களை அல்லது விடை எழுதும் புத்தகத்தை கிழித்தல் அல்லது கசக்குதல் கூடாது. பரும்படி வேலைகளை செய்து பார்ப்பதற்காக உபயோகிக்கும் சகல தாள்களையும் தெளிவாக குறுக்காக கோடிட்டு விடைத்தாளுடன் இணைத்தல் அல்லது விடைத்தாளுடன் கையளித்தல் அல்லது வழங்கப்படுகின்ற அறிவுறுத்தலின் படி செய்தல் வேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதப்பட்ட எதனையும் வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. ஒரே வினாவிற்கான விடை இரு இடங்களில் எழுதப்பட்டிருப்பின் அவசியமற்ற விடையைத் தெளிவாக வெட்டி விட வேண்டும்.
9. பரீட்சையின் போது விடையளிப்பதற்காக உமக்கு வழங்கப்படுகின்ற தாள்கள் மற்றும் வேறு பொருட்களை பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. இவ்வாறான அனைத்துப் பொருட்களும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்திற்கு சொந்தமானதுடன் இவ் விதியினை மீறுதல் ஒரு தண்டனைக்குரிய செயற்பாடாகக் கருதப்படும்.
10. பரீட்சையின் போது விடையளிப்பதற்காக தனக்கு வழங்கப்படுகின்ற காகிதாதிகள் ஒவ்வொரு பரீட்சையின் போதும் தனக்ருகே வைத்துக் கொள்ளக்கூடிய எழுத்து மூலமான அனுமதியுள்ள பொருட்கள் தவிர்ந்த ஏனைய குறிப்புப் புத்தகங்கள், குறிப்புகள் உள்ளடங்கிய தாள்கள் அல்லது கடதாசித்துண்டுகள் போன்றவை பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சைக்குத் தோற்றும் சந்தர்ப்பத்தில் தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் கூடாது. அது போன்றே பரீட்சை மண்டபத்தினுள் கையடக்கத் தொலைபேசி, இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் (Electronic Communication Instruments/ Devices) தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் மற்றும் அந்த சாதனங்கள்/கருவிகளை உபயோகித்து வெளி நபர்களின் உதவிகளைப் பெற்றுக் கொள்ளல் மற்றும் பரீட்சை நடைபெறும் போது வேறு நபர்களுக்கு மற்றும் சமூக ஊடகங்களுக்கு தகவல் அனுப்புதல் மோசடிச் செயற்பாடு என்பதுடன் தண்டனைக்குரிய குற்றமாகும்.
11. இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் மேற்குறிப்பிட்ட 10ஆவது பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள செயற்பாடுகள் தொடர்பாக உபயோகிக்கப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டால் அச் சாதனங்கள்/கருவிகள் உரிய விசாரணை நடவடிக்கைகள் முடிவடையும் வரை பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் வசம் எடுக்கப்படுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
12. பரீட்சை மண்டபத்தில் அமர்ந்த பின்னர், பரீட்சைக்கு முன் அல்லது பரீட்சை நடைபெறும் சந்தர்ப்பத்தில் எந்தவொரு பரீட்சார்த்தியும் தன் அருகே பரீட்சைக்காக கொண்டு வருவதற்கு அனுமதிக்கப்படாத எந்தவொரு பொருளையும் அல்லது உபகரணத்தையும் வைத்திருத்தல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழாம் கட்டளையிட்டால் சகல பரீட்சார்த்திகளும் தன் வசம் உள்ளவற்றை வெளிப்படுத்துவதற்கும் மற்றும் பரிசோதிப்பதற்கும் கட்டுப்படுவதுடன் இவ்வாறான தேவைப்பாட்டினை மீறுவது மோசடியான செயற்பாட்டை செய்வதற்கு முயற்சித்ததாகக் கருதப்படும்.
13. எவரேனும் ஒரு பரீட்சார்த்தி வேறு ஒரு பரீட்சார்த்தியின் விடைத்தாளிலிருந்து அல்லது புத்தகத்திலிருந்து அல்லது தாளிலிருந்து அல்லது குறிப்பெழுதிய தாள்களிலிருந்து அல்லது சமிக்ஞைகள் மூலம் அல்லது வேறு ஏதேனும் ஒன்றிலிருந்து பார்த்து எழுதுதல் அல்லது பார்த்து எழுத முயற்சித்தல் அல்லது மோசடியாக நடந்து கொள்ளல் என்பன குற்றமாகும். வேறு பரீட்சார்த்திக்கு உதவி செய்தல், வேறு பரீட்சார்த்தியிடமிருந்து அல்லது நபரிடமிருந்து அல்லது பரீட்சை பணிக் குழுவினரிடமிருந்து உதவி பெறுதல் குற்றம் என்பதுடன் விடையளித்து முடிந்த சகல தாள்களையும் எழுதிக் கொண்டிருக்கும் தாளுக்குக் கீழே வைத்து விடையளித்தல் வேண்டும். எழுதுகின்ற தாள்களை மேசையின் மேல் பரப்பி வைத்திருத்தல் கூடாது.
14. பரீட்சை ஆரம்பிக்கப்பட்டு வினாத்தாளுக்கு விடையளிக்கும் போது எக்காரணம் கொண்டும் குறுகிய நேரத்திற்குக் கூட பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கு எந்தவொரு பரீட்சார்த்திக்கும் இடமளிக்கப்பட மாட்டாது. எனினும், ஒரு பரீட்சார்த்திக்கு மலசலகூடத்திற்கு செல்வதற்காக பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டால் பரீட்சை மேற்பார்வையாளரின் உதவி பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரின் கண்காணிப்பின் கீழ் பரீட்சார்த்திக்கு சிறிது நேரம் வெளியே செல்வதற்கு அனுமதிக்கப்படுவார். அவ்வாறு வெளியே செல்லும் முன்பும், மீண்டும் பரீட்சை மண்டபத்திற்குள் வரும் போதும் அவர் சோதனைக்கு உட்படுத்தப்படல் வேண்டும்.
15. பரீட்சை மண்டபத்தில் விடையளிக்கத் தொடங்குவதற்கு முன் அல்லது பின் உரிய பரீட்சார்த்திக்குப் பதிலாக போலிப் பரீட்சார்த்தி ஒருவர் தோற்றுதல் தண்டனைக்கு உள்ளாகக்கூடிய செயற்பாடாகும். ஆளடையாள அட்டையை மாற்றுதல் அல்லது போலி அடையாள அட்டையைச் சமர்ப்பித்தல் ஒரு மோசடிச் செயற்பாடாகக் கருதப்படும்.
16. பரீட்சார்த்தி ஒருவர் அல்லது பரீட்சார்த்தி அல்லாத ஒருவர் எந்தவொரு பரீட்சார்த்திக்கும் தவறான முறையில், மோசடி செய்யும் வகையில் உதவி செய்தல் ஒரு பாரிய குற்றமாக கருதப்படும்.
17. பரீட்சார்த்தி ஒருவர் கீழ்க் குறிப்பிடப்படும் அறிவுறுத்தல்களுக்கமைய செயற்படல் வேண்டும்:
    (i) சகல பரீட்சார்த்திகளும் தனது அனுமதிப்பத்திரத்தில் கையொப்பத்தினை உறுதி செய்து கொள்வதும், விண்ணப்பிக்கப்பட்ட பாடங்கள் மற்றும் அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள பாடங்களுக்கிடையில் பொருந்தாத தன்மை காணப்படின் பரீட்சைத் திணைக்களத்தில் விசாரித்து பரீட்சைக்கு முன் அதைத் திருத்திக் கொள்வதும் மேற்கொள்ளப்பட வேண்டும்;
    (ii) பரீட்சை ஆரம்பிப்பதற்கு அரை (1/2) மணித்தியாலத்திற்கு முன்னர் பரீட்சை மண்டபத்திற்கு சமுகமளித்தல் உசிதமானது என்பதுடன், பரீட்சை மண்டபம் நிச்சயமாகத் தெரியாதவிடத்து பரீட்சை ஆரம்பிக்கும் தினத்திற்கு முன்னரே அது குறித்து விசாரித்து பரீட்சை மண்டபத்தை சரியாக இனங்காணல் சிறந்தது;
    (III) பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்தி ஒவ்வொரு பாடங்களுக்குத் தோற்றும் போதும் தனது ஆள் அடையாள அட்டையை வழங்கி தனது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.
        (a) ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்தில் சமர்ப்பிக்காவிடின், பரீட்சார்த்தியாய் இருத்தல் இரத்துச் செய்யப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன், ஏதேனும் காரணத்தால் அதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்திற்கு கொண்டு வர மறந்திருப்பின் அதனைப் பற்றி பரீட்சை மேற்பார்வையாளருக்கு அறிவித்து பரீட்சை முடிவடைவதற்கு முன்னர் அவற்றைச் சமர்ப்பிப்பதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.
        (b) சகல பரீட்சார்த்திகளும் தனது ஆள் அடையாளம் தெளிவாக வெளிப்படுத்தும் வகையில், முழு முகத்தையும் நன்றாக அடையாளம் காணக்கூடிய வகையில் பரீட்சை நடைபெறும் கால எல்லையில் பரீட்சை மண்டபத்தில் இருக்க வேண்டும்.
    (iv) பரீட்சார்த்தி புளூடூத் (Bluetooth) போன்ற இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகளை (Electronic Communication Devices) உபயோகிக்கவில்லை என்பதனை உறுதி செய்து கொள்வதற்காக பரீட்சை மண்டபத்தில் தனது இரு காதுகளையும் தெளிவாகத் தெரியும் வகையில் வைத்திருத்தல் வேண்டும்;
    (v) பரீட்சை மண்டபத்தில் உமக்கு வழங்கப்படுகின்ற தாள்களை விடுத்து வேறு எவ்வித கடதாசிகளையும் விடையளிப்பதற்கு உபயோகிக்கக் கூடாது. எஞ்சிய கடதாசிகளை மற்றும் வேறு பொருட்களை அசுத்தப்படுத்தாது மீண்டும் உபயோகிக்கக்கூடிய வகையில் உமது மேசையின் மேல் வைக்க வேண்டும்;
    (vi) பரீட்சார்த்திகள் தங்களது பேனா, பென்சில், அழிறப்பர், அடிமட்டம், கேத்திரகணித உபகரணங்கள், வர்ணப் பென்சில் பெட்டி, வர்ண சோக் பெட்டி போன்றவற்றைக் கொண்டு வருதல் வேண்டும்;
    (vii) நீங்கள் உபயோகிக்கும் விடையளிக்கும் புத்தகம் மற்றும் சகல தாள்களிலும் விடையெழுத தொடங்கும் போது உடனடியாக சுட்டெண்ணைத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும். விடைத்தாள்களின் இருபுறமும் தெளிவாக, சுத்தமாக விடையெழுத வேண்டும். வினாவொன்றின் ஒரு பகுதிக்கு விடையெழுதிய பின் அவ் வினாவின் மற்றைய பகுதியை ஆரம்பிப்பதற்கு முன் ஒரு வரியையாவது வெறுமையாக விடுதல் வேண்டும். ஒவ்வொரு வினாக்களுக்குமான விடையினைப் புதிய பக்கத்தில் ஆரம்பித்தல் வேண்டும்;
    (vIII) விடையளிக்கும் தாளின் இடதுபுற விளிம்புக்கோடு காணப்படுவது வினாக்களின் இலக்கங்களை எழுதுவதற்காகும். வலதுபுற விளிம்புக்கோடு ஒதுக்கப்பட்டிருப்பது மதிப்பிடுபவரின் உபயோகத்திற்காகும். அதனால் அவற்றில் எதுவும் எழுதுதலாகாது. உம்மால் விடையளிக்கப்பட்ட வினாக்களின் இலக்கங்களைப் பிழையாக இடுவது குழப்பத்திற்குக் காரணமாக அமையும் என்பதனால் வினா இலக்கத்தைச் சரியாக எழுதுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்;
    (ix) கணித வினாக்களுக்கு விடையளிக்கும் போது கணக்குச் செய்முறைகள் பார்த்த மற்றும் பரும்படி வேலைகள் அந்தந்த ஒழுங்கில் கணக்கிற்கான விடையைக் கண்டு பிடித்ததன் ஒரு பகுதியாகக் காட்டப்பட வேண்டும். அவசியமான இடங்களில் வரையப்படும் வரிப்படங்கள் மற்றும் படங்கள் சரியானவையாகவும் குறிப்பிடத்தக்க அளவு பெரிதானதாகவும் இருத்தல் வேண்டும்;
    (x) கட்டாயமான வினா மற்றும் தெரிவு செய்யப்பட வேண்டிய ஏனைய வினாக்கள் தொடர்பாக வினாப்பத்திரத்தில் ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்தல் வேண்டும். வினாப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப விடையளிக்கப்படாத சந்தர்ப்பங்களில் புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது;
    (xi) ஒவ்வொரு வினாவிற்கும் விடையளித்து முடிந்த பின் விடையளித்த புத்தகத்திற்கு மேலதிகமாக எழுதிய தாள்களை பக்க இலக்கங்களின் ஒழுங்கில் இணைத்து இடதுபுற மேல்மூலையில் கழறாத வகையில் கட்டுதல்/இணைத்தல் வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளிக்கும் முன் சகல விடைத்தாள்களும் இணைக்கப்பட்டுள்ளனவா என்பதனை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளித்த பின் பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லப்பட்ட எந்தவொரு விடை எழுதிய தாளும் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட மாட்டாது;
    (xii) உங்கள் விடைத்தாளை பரீட்சை மேற்பார்வையாளரிடம் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரிடம் கையளித்தல் வேண்டும். விடைப்பத்திரங்களை சேகரிக்கும் வரை உங்களது ஆசனத்தில் அமர்ந்திருத்தல் வேண்டும். அவ்வாறு செய்வதற்குத் தவறுவதானது, சிலவேளை உமது விடைப்பத்திரம் காணாமல் போவதற்கும் நீர் ஏதாவது பாடத்திற்கு சமுகமளிக்கவில்லை என்று கருதுவதற்கும் காரணமாக அமையும்;
    (xIII) ஏதாவது காரணத்துக்காக பரீட்சை மேற்பார்வையாளருடன் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவருடன் கதைக்க வேண்டிய அவசியம் ஏற்படின், ஏனையவர்களுக்கு இடையூறு ஏற்படாத வகையில் மேசையில் இருமுறை தட்டுவதன் மூலம் சமிக்ஞை செய்தல் வேண்டும்.

பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்.

இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

## ஆரம்ப சுகாதார சேவைகள், தொற்றுநோய்கள் மற்றும் கொவிட் நோய் கட்டுப்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சு

*சமூக சேவைகள் திணைக்களம்*

### வாழ்க்கைத் தொழில் போதனாசிரியர் (தரம் III)

*சமூக சேவைகள் திணைக்களத்தினால் கெடவல வாழ்க்கைத் தொழிற்பயிற்சி நிறுவனத்திற்கு வாழ்க்கைத் தொழில் போதனாசிரியர் பதவி 01 தொடர்பில் ஆட்சேர்ப்புச் செய்வதற்கு இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. பின்வருமாறு காட்டப்பட்டுள்ள விண்ணப்பப் படிவத்திற்கமைவாக தயாரிக்கப்பட்டுள்ள விண்ணப்பங்களினை, "பணிப்பாளர், சமூக சேவைகள் திணைக்களம், 02 ஆவது மாடி, II ஆவது கட்டம், செத்சிறிபாய, பத்தரமுல்ல" என்ற முகவரிக்கு 2021.05.21 ஆந் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு பதிவுத் தபாலில் அனுப்பப்படுதல் வேண்டும். விண்ணப்பப் படிவத்தினை வைத்து அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில், "வாழ்க்கைத் தொழில் போதனாசிரியர் (தரம் III) தொடர்பில் ஆட்சேர்ப்புச் செய்தல்" எனக் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும். www.socialservices.gov.lk என்ற இணையத் தளத்தினூடாக மாதிரிப் படிவம் மற்றும் விபரங்களினைப் பெற்றுக்கொள்ள முடியும்.*

*இப்பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான தகைமைகள்*

1. **வாழ்க்கைத் தொழில் போதனாசிரியர் (வாகனத்திற்கு தீந்தை அடித்தல்)**

1.1 **வயதெல்லை.-**

*விண்ணப்பப் படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினத்தன்று 18 வயதிற்குக் குறையாமலும் 35 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.*

1.2 **கல்வித் தகைமைகள் .-**

*(அ) வாழ்க்கைத் தொழில் போதனாசிரியர் (வாகனத்திற்கு தீந்தை அடித்தல்) பதவிகளுக்கான கல்வித் தகைமைகள்*

(i) *சிங்களம்/தமிழ் மொழி, கணிதம் மற்றும் மேலும் இரண்டு பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஒரே அமர்வில் (06) பாடங்களில் க.பொ.த. (சா.த.) பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல். மற்றும்*

(ii) *கல்விப் பொது தராதரப் பத்திர (உயர் தர) பரீட்சையில் வேண்டிய பாட விதானமொன்றில் சகல பாடங்களிலும் (சாதாரண பொதுப் பரீட்சையினைத் தவிர்த்து) சித்தி பெற்றிருத்தல், மூன்றாம் நிலைக் கல்விப் பாடநெறியொன்றினைத் தொடர்வதற்குத் தேவையான செயற்திறன் மட்டத்தினைப் பெற்றிருத்தல்.*

1.3. **தொழில் தகைமைகள்**

*உரிய வாழ்க்கைத் தொழில் தொடர்பில் இலங்கை தொழில்நுட்பக் கல்லூரியில் அல்லது ஜேர்மன் தொழில்நுட்பப் பயிற்சி நிறுவனத்தில் இரண்டு வருடங்கள் அல்லது அதனிலும் கூடிய வருடச் சான்றிதழ் அல்லது*

*சிறு கைத்தொழில் திணைக்களத்தில் அல்லது ஆடைக்கைத்தொழில் திணைக்களத்தில் இரண்டு வருடங்கள் அல்லது அதனிலும் கூடிய வருடச் சான்றிதழ் அல்லது*

*சமூக சேவைகள் திணைக்களம் அல்லது தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் அல்லது அதனுடன் இணைந்த நிறுவனங்களினூடாக நடாத்தப்பட்ட இரண்டு வருடங்கள் அல்லது அதனிலும் கூடிய வருடப் பாடநெறிச் சான்றிதழ் அல்லது*

*வாழ்க்கைத் தொழிற் பயிற்சி அதிகார சபை அல்லது அதனுடன் இணைந்த நிறுவனமொன்றிலிருந்து பெறப்பட்ட உரிய வாழ்க்கைத் தொழில் தொடர்பிலான இரண்டு வருடங்கள் அல்லது அதனிலும் கூடிய வருடச் சான்றிதழ் அல்லது*

*மூன்றாம் நிலை மற்றும் வாழ்க்கைத் தொழிற் கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தேசிய வாழ்க்கைத் தொழிற் திறன் (NVQ) ஐந்தாவது (05) மட்டத்திற்கு உள்ளடக்கப்பட்ட தொழில்நுட்பப் பாடநெறி அல்லது அதற்குச் சமம் என மூன்றாம்நிலை மற்றும் வாழ்க்கைத் தொழிற் கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பாடநெறியொன்றினை வெற்றிகரமாக முன்னெடுத்து சான்றிதழினைப் பெற்றிருத்தல்.*

*1.4* **அனுபவம்**

தொடர்பற்றது

*1.5* **உடற் தகுதிகள்**

ஒவ்வொரு விண்ணப்பதாரரும் இலங்கையின் எப் பாகத்திலும் பணியாற்றுவதற்கும், பதவியின் கடமைகளினை நிறைவேற்றுவதற்கும் போதிய உடல் மற்றும் உள ஆரோக்கியத் தகுதியினைக் கொண்டவராக இருத்தல் வேண்டும்.

*1.6* **பிற**

i. இலங்கைப் பிரசையாக இருத்தல்;

ii. விண்ணப்பதாரர் சிறந்த நன்னடத்தையினைக் கொண்டவராக இருத்தல்;

iii. பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்தல் தொடர்பில் 1.1 தொடக்கம் 1.6 வரையான சகல தகைமைகளினையும், அத்தகைமைகள் பூர்த்தி செய்யப்படுதல் வேண்டும் என விண்ணப்பங்கள் கோரப்படும் அறிவித்தலில்/ வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட தினத்தன்று அனைத்து வகையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

*1.7* **ஆட்சேர்ப்பு முறைமை**

எழுத்துமூல மற்றும் வாழ்க்கைத் தொழில் பரீட்சை பெறுபேற்றினை அடிப்படையாகக் கொண்டு ஆட்சேர்ப்புச் செய்யப்படுவர். எழுத்து மூலப் பரீட்சையில் தேர்ச்சி பெற்றவர்களில் அதிகூடிய மதிப்பெண்களினைப் பெற்ற திறன் ஒழுங்கு முறையின் பிரகாரம் நிலவும் வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு, இருமடங்கினர் சாதாரண நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். சாதாரண நேர்முகப் பரீட்சையில் தகைமைகளினைப் பெற்றவர்கள் மாத்திரமே வாழ்க்கைத் தொழில் பரீட்சைக்கு முன்வைக்கப்படுவர்.

வாழ்க்கைத் தொழில் பரீட்சையில் தேர்ச்சி பெற்றவர்கள், அவர்கள் எழுத்து மூலப் பரீட்சையில் பெற்றுக்கொண்ட புள்ளிகளினதும், வாழ்க்கைத் தொழில் பரீட்சையில் பெற்றுக் கொண்ட புள்ளிகளினதும் மொத்தக் கூட்டுத்தொகையின் பிரகாரம், திறன் ஒழுங்கு முறையில் வெற்றிட எண்ணிக்கைக்கு சமமான எண்ணிக்கை பயிற்சிப் பாடநெறிக்குத் தெரிவு செய்யப்படுவர். அத்தொகுதியினர் 03 மாதங்கள் கற்பித்தல் முறைமை தொடர்பில் பயிற்சிப் பாடநெறியொன்றினை முன்னெடுத்து வெற்றிகரமாக நிறைவு செய்து சான்றிதழ் ஒன்றினைப் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும். அவ்வாறு சான்றிதழ்களைப் பெற்றுக் கொள்ளும் விண்ணப்பதாரர்கள் மாத்திரமே பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படுவர்.

*1.7.1* **எழுத்துமுலப் பரீட்சை**.-

| விடயங்கள் | நேரம் | ஆகக்கூடிய மதிப்பெண்கள் | தேர்ச்சி மதிப்பெண்கள் |
|---|---|---|---|
| உளச்சார்புப் பரீட்சை | 01 மணி நேரம் | 100 | 40 |
| விளங்கிக்கொள்ளுதல் | 02 மணி நேரம் | 100 | 40 |

*1.8* **சம்பள அளவுத் திட்டம்**

பொ.நி.சு. 03/2016 இன் பிரகாரம் MT- 01 -2016

சம்பள அளவு ரூபா 29,840-10×300-11 × 350-10 × 560-10 × 660-ரூபா 48,890.00 ஆகும்.

*1.9* **சேவை நிபந்தனைகள் :-**

இப்பதவி நிரந்தரமானது, ஓய்வூதியத்தினைக் கொண்டது, ஓய்வூதியத் திட்டம் தொடர்பில் அரசினால் எதிர்வரும் காலங்களில் எடுக்கப்படும் கொள்கைசார் தீர்மானத்திற்கு அமைவாக இருத்தல் வேண்டும் என்பதுடன், விதவைகள் மற்றும் அநாதைகள் ஓய்வூதியப் பங்களிப்பு நிதியினைச் செலுத்துதலும் வேண்டும். பொ.நி.சு. 01/2014மற்றும் அதனுடன் தொடர்பான சுற்றுநிருபங்களின் பிரகாரம், ஐந்து வருடங்களினுள் வேண்டப்பட்ட அரசகரும மொழித் தேர்ச்சியினைப் பெற்றிருத்தல் வேண்டும்.

**குறிப்பு**

1. சமூக சேவைகள் பணிப்பாளரினால் தீர்மானிக்கப்படும் எழுத்து மூலப் பரீட்சை கொழும்பில் நடாத்தப்படும்.

2. மேற்குறிப்பிட்ட தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரர்கள் மாத்திரம் விண்ணப்பித்தல் வேண்டும் என்பதுடன், தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரர்கள் உரிய வெற்றிடங்களினைக் கொண்ட நிறுவனத்தில் ஆகக்குறைந்தது ஐந்து வருடங்கள் கட்டாயச் சேவையின் பின்னர் மாத்திரமே வருடாந்த இடமாற்றத்தினைக் கோருவதற்கு தகைமையினைப் பெறுவர்.

**சந்தன ரணவீர ஆரச்சி,**
சமூக சேவைகள் பணிப்பாளர்.

சமூக சேவைகள் திணைக்களம்,
2 வது மாடி,
II வது கட்டம்,
செத்சிறிபாய,
பத்தரமுல்ல.
2021.04.23.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**சமூக சேவைகள் திணைக்களம்**

.........................................பதவி தொடர்பில் ஆட்சேர்ப்புச் செய்யும் விண்ணப்பப் படிவம்

மொழி ஊடகம் [ ]

01. முதலெழுத்துக்களுடன் பெயர் : ....................................................................................

02. முதலெழுத்துக்கள் சுட்டிநிற்கும் பெயர் : ..........................................................................

...........................................................................................................................

03. முகவரி : ...............................................................................................................

04. தொலைபேசி இலக்கம் : ..............................................................................................

05. தேசிய அடையாள அட்டை இலக்கம் : ...........................................................................

06. பிறந்த திகதி : ...........................................................................................................

07. விண்ணப்பப் படிவம் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் தினத்தன்று வயது :

வருடங்கள்: ............ மாதங்கள் : ........... நாட்கள் : ................

08. திருமணமானவர்/திருமணமாகாதவர் : ............................................................................

09. ஆண் /பெண் பாகுபாடு : ..............................................................................................

10. கல்வித் தகைமைகள் :

I. க.பொ.த. (சாதாரண தரம்)
வருடம் : ........................... பரீட்சை சுட்டெண்: ...........................

| பாடங்கள் | தரம் | பாடங்கள் | தரம் |
|---|---|---|---|
| கணிதம் | | | |
| சிங்களம்/தமிழ்/ஆங்கிலம் | | | |
| | | | |
| | | | |
| | | | |

II க.பொ.த. (உயர் தரம்)
வருடம் : ........................... பரீட்சை சுட்டெண்: ...........................

| பாடங்கள் | தரம் | பாடங்கள் | தரம் |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

11. வாழ்க்கைத் தொழில் மற்றும் பிற தகைமைகள் :

| பாடநெறியின் பெயர் | நிறுவனம் | பாடநெறியின் காலப்பகுதி |
|---|---|---|
| | | |
| | | |

12. அனுபவம் :

.......................................................................................................................................................................

.......................................................................................................................................................................

.........................................................................................................................

இவ் விண்ணப்பப் படிவத்தில் என்மூலம் வழங்கப்பட்டுள்ள தகவல்கள், எனது அறிவு மற்றும் நம்பிக்கையின் பிரகாரம் உண்மையானது என்றும் மற்றும் சரியானது என்றும் உறுதிப்படுத்துகின்றேன்.

.............................................
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

05-113

## துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சு

துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சின் ஊடகப் பிரிவிற்காக தற்காலிக அடிப்படையில் நியமிப்பதற்குரிய கீழ்வரும் பதவிக்கு தகுதிகள் மற்றும் அனுபவம் கொண்ட இலங்கை பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் இத்தால் கோரப்படுகின்றது.

**பதவி :** புகைப்படக் கலைஞர் உதவியாளர்
பதவிகளின் எண்ணிக்கை : 01

**பதவியின் தன்மை** : தற்காலிகம்

**சேவை வகையீடு** : **PL 1**தரம் **III**

**சம்பளம்** : மாதாந்த கொடுப்பனவு ரூபா 24,250/- மற்றும் ரூபா 7,800/- வாழ்க்கைச் செலவு கொடுப்பனவு

**கல்வித் தகைமைகள்:**

க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாமல் குறைந்தது இரண்டு திறமைச் சித்திகளுடன் ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

**தொழிற் தகைமைகள்:**

குறித்த துறையில் பெற்றுள்ள தொழிற் தகைமைகள் விசேடதகுதியாகக் கொள்ளப்படும்.

**வயது :**

18 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

**ஆட்சேர்க்கும் முறை :**

தகைமைகளை மதிப்பிடும் நேர்முகப் பரீட்சையொன்றின் மூலம் அதிகூடிய தகுதிகளைக் கொண்ட நபர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

**ஏனையவை:**

i. இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.

ii. விண்ணப்பதாரி சிறந்த நல்லொழுக்கமுடையவராய் இருத்தல் வேண்டும்.

iii. பதவிக்கு தெரிவு செய்வதற்குத் தேவையான அனைத்து தகுதிகளையும் பூரணப்படுத்த வேண்டுமென விண்ணப்பம் கோரப்படும் அறிவித்தலில் குறிப்பிடப்படுகின்ற தினத்திற்கு அத்தகுதிகள் அனைத்து முறையிலும் பூரணமாயிருத்தல் வேண்டும்.

விண்ணப்பதாரிகளினால் பூரண விபரங்களுடன் தயாரிக்கப்பட்ட தமது விண்ணப்பம், பிறப்புச் சான்றிதழ், கல்வி, தொழில் மற்றும் அனுபவம் தொடர்பான சான்றிதழ்களின் பிரதிகளுடன் பதிவுத் தபால் மூலமாக கீழே குறிப்பிட்டுள்ள முகவரிக்கு 2021.05.24 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னர் அனுப்பவேண்டும். விண்ணப்பத்தை அனுப்பும் கடிதத்தின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியை குறிப்பிட வேண்டும். குறித்த திகதிக்கு பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள், கையொப்பமிடப்படாத விண்ணப்பங்கள் மற்றும் மேற்குறித்த கல்வி தகைமைகள் மற்றும் சான்றிதழ்கள் இல்லாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

இவ்வறிவித்தலானது துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சின் உத்தியோகப்பூர்வ இணையத்தளத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. www.portmin.gov.lk

செயலாளர்.

துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சு,
இல.19, சைத்திய வீதி,
கொழும்பு 01,
2021.05.07.

05-364

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## அரசாங்க சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

### இலங்கை அரசாங்க நூலகர் சேவையின் II ஆம் தரத்தைச் சேர்ந்த அலுவலர்களுக்கான வினைத்திறன் காண் தடை தாண்டல் பரீட்சை - 2018 - 2021

2024/ 35 ஆம் இலக்க 2017.06.21 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டவாறான இலங்கை அரசாங்க நூலகர் சேவைப் பிரமாணக் குறிப்பின் 04 ஆம் பின் இணைப்பின் ஏற்பாடுகளுக்கு ஏற்ப இலங்கை அரசாங்க நூலகர் சேவை தரம் II இல் உள்ள அலுவலர்களுக்கான வினைத்திறன் காண் தடை தாண்டல் பரீட்சை - 2021, ஓகத்து மாதம் கொழும்பில் நடாத்தப்படும். இவ் அறிவித்தலின் படி குறித்த வினைத்திறன் காண் தடை தாண்டல் பரீட்சைக்காக அரசாங்க சேவையின் இணைந்த சேவைக்குரிய அலுவலர்கள் மாத்திரமே விண்ணப்பிக்க முடியும்.

**குறிப்பு**.- இவ் வர்த்தமானி அறிவித்தலுக்கு ஒத்திசைவாக மாகாண அரசாங்க சேவையின் நூலகர் சேவை விண்ணப்பதாரிகளுக்கான ஏற்பாடுகள் உரிய மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினாலும் ஏனைய நிறுவனங்களின் விண்ணப்பதாரிகளுக்கான ஏற்பாடுகள் அவ்வந்த நிறுவனங்களினாலும் வெளியிடப்படும்.

“ஒவ்வொரு மாகாண அரசாங்க சேவை மற்றும் ஏனைய நிறுவனங்களிலுள்ள அலுவலர்களின் விண்ணப்பங்களை வசதியாக இனங்காண்பதற்கென விண்ணப்பங்களின் தலைப்பில் உரித்தான சேவைகள் அல்லது நிறுவனத்தினைக் குறிப்பிடும் போது குறியீட்டு இலக்கங்கள் பாவிக்கப்படல் வேண்டும். அதற்கிணங்க “**இணைந்த சேவையின் அலுவலர்களுக்கான குறியீட்டு இலக்கம் 10” ஆகும்**. அவ் இலக்கத்தினை விண்ணப்பத்தின் வலப்பக்க மேல் மூலையில் தாங்களுக்குரிய சேவை என்னும் இடத்தில் குறிப்பிடல் வேண்டும்.

02. (i) இப் பரீட்சையானது பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படுமென்பதுடன், பரீட்சை நடத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடல் தொடர்பாக அவரால் விதிக்கப்பட்டுள்ள சட்டதிட்டங்களுக்கு பரீட்சார்த்திகள் கட்டுப்பட்டொழுகுதல் வேண்டும்.

(ii) பரீட்சார்த்திகளுக்கென விதிக்கப்பட்டுள்ள விதிகள் வர்த்தமானி அறிவித்தலின் ஆரம்பத்தில் பிரத்தியேகமாக அச்சிடப்படப்பட்டுள்ளன. இவ் விதிகளை மீறுவோர் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு ஆளாவார்.

03. இப் பரீட்சைக்கான மாதிரி விண்ணப்பப்படிவம் இவ் அறிவித்தலின் இறுதியில் வெளியிடப்பட்டுள்ளது. பரீட்சார்த்திகள் தமது விண்ணப்பத்தை மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைய சரியாகவும், தெளிவாகவும் தயாரித்து தமது திணைக்களத் தலைவர் ஊடாக பதிவுத் தபாலில் 2021, யூன் மாதம் 14 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவகையில் “பரீட்சை ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு (நிறுவனம் சார் மற்றும் வெளிநாட்டு பரீட்சைகள்) கிளை, இலங்கை பரீட்சைத் திணைக்களம், த. பெ. இல. 1503, கொழும்பு” எனும் முகவரியைச் சென்றடையும் வண்ணம் அனுப்பி வைத்தல் வேண்டும். விண்ணப்பங்ளை பரீட்சை ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பும் போது கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் பரீட்சையின் பெயர் மற்றும் தரம் என்பவற்றைக் குறிப்பிடுதல் வேண்டும். விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

04. **விண்ணப்பதாரியின் ஆளடையாளம்**.- விண்ணப்பதாரிகள் தாம் தோற்றும் ஒவ்வொரு பாடத்தின் போதும் தமது அடையாளத்தைப் பரீட்சை மேற்பார்வையாளர் திருப்தியுறும் வகையில் நிரூபித்தல் வேண்டும். இந் நோக்கத்திற்காக, கீழேயுள்ள ஆவணங்களுள் எவையேனும் ஒன்று ஏற்றுக்கொள்ளப்படும்:

(i) தேசிய ஆள் அடையாள அட்டை ;
(ii) செல்லுபடியாகும் கடவுச் சீட்டு;
(iii) செல்லுபடியாகும் இலங்கை சாரதி அனுமதிப்பத்திரம்

அவ்வாறே பரீட்சார்த்திகளின் ஆளடையாளத்தை உறுதிப்படுத்தும் வகையில் முகம் மற்றும் இரு காதுகளையும் மறைக்காது பரீட்சை மண்டபத்திற்கு பிரவேசிக்க வேண்டும். அவ்வாறு தனது ஆளடையாளத்தை உறுதிப்படுத்த மற்றும் விண்ணப்பதாரிகள் பரீட்சை மண்டபத்தினுள் நுழைய அனுமதிக்கப்படமாட்டார்கள். மேலும் பரீட்சை மண்டபத்திற்கு பிரவேசித்தது முதல் பரீட்சை நிறைவுபெற்று வெளியேறும் வரை பரீட்சை அதிகாரிகளுக்கு விண்ணப்பதாரியை அடையாளம் காண முடியுமான வகையில் முகம் மற்றும் இரு காதுகளையும் மறைக்காதிருத்தல் வேண்டும்.

05. **விண்ணப்பங்கள்** .- விண்ணப்பங்கள் “ஏ4” அளவிலான ஒரு தாளின் இரு பக்கங்களையும் உபயோகித்து இல. 1.0 தொடக்கம் 5.0 வரை முதல் பக்கத்திலும் இல. 6.0 தொடக்கம் 9.0 வரை இரண்டாம் பக்கத்திலும் அமையும் வண்ணம் தயாரிக்கப்படல் வேண்டும். விண்ணப்பம் தட்டச்சில் பொறிக்கப்பட்டு அனுப்பப்படலாம். ஆனால் அது சரியாகவும் தெளிவாகவும்

விண்ணப்பதாரியின் சொந்தக் கையெழுத்தில் பூர்த்தி செய்யப்பட்டிருத்தல் வேண்டும். மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கேற்ப அமையாத விண்ணப்பங்களும், பூரணமாக நிரப்பப்படாத விண்ணப்பங்களும் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். பூரணப்படுத்திய விண்ணப்பப்படிவத்தின் நிழற்படப்பிரதியொன்றை தம்வசம் வைத்திருத்தல் பயனுள்ளதாகும். பரீட்சை விண்ணப்பப்படிவத்தின் தலைப்பில் குறிப்பிட்டுள்ள பரீட்சையின் பெயர் சிங்கள விண்ணப்பப்படிவங்களில் சிங்களத்திற்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் தமிழ் விண்ணப்பப்படிவங்களில் தமிழ் மொழிக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் குறிப்பிடப்படல் வேண்டும். முழுமைப்படுத்திய விண்ணப்பம் பரீட்சை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்தை ஒத்ததாக மற்றும் சகல தகவல்களையும் உள்ளடக்கி சரியாக நிரப்பப்பட்டுள்ளதா எனவும் உரிய பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்டு அதன் விபரங்களை விண்ணப்பத்தில் உள்ளடக்கி பற்றுச்சீட்டு ஒட்டப்பட்டுள்ளதா என்பது பற்றியும் விண்ணப்பதாரியினால் பரீட்சித்துப் பார்த்தல் வேண்டும். விண்ணப்பப்படிவம் அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "இலங்கை அரசாங்க நூலகர் சேவையின் தரம் II உள்ள அலுவலர்களுக்கான வினைத்திறன் காண் தடை தாண்டல் பரீட்சை - 2018 (I) - 2021 " எனக் குறிப்பிடவும்.

**போலியான தகவல்களுக்கான தண்டனை**. – விண்ணப்பத்தினை பூரணப்படுத்தும் போது மிகக் கவனமாக சரியான தகவல்களை நிரப்புதல் வேண்டும். பரீட்சையின் ஒழுங்கு விதிகளுக்கு ஏற்ப எவரேனும் ஒரு பரீட்சார்த்தி தகைமையற்றவர் எனத் தெரியவருமிடத்து பரீட்சைக்கு முன்னர் அல்லது பரீட்சை நடைபெறும் போது அல்லது பரீட்சையின் பின்னர் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பரீட்சார்த்தத் தன்மையினை இரத்துச்செய்ய முடியும்.

முதல் முறை இப் பரீட்சைக்குத் தோற்றும் அலுவலர்கள் எதுவித பரீட்சைக் கட்டணமும் செலுத்த வேண்டியதில்லை. எனினும் அடுத்து வரும் தடவைகளில் தோற்றும் அலுவலர்கள் சகல பாடங்களுக்கும் தோற்றுவதாயின் ரூபா 500 உம் தனியாக ஒரு பாடத்திற்கு மட்டும் தோற்றுவதாயின் ரூபா 250 உம் பரீட்சைக் கட்டணமாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு 20-03-02-13 இற்கு வரவு வைத்து நாட்டின் எந்தவொரு தபாலகம் /உப தபாலகம் அல்லது மாவட்ட/ பிரதேச செயலகத்தில் செலுத்திப் பெற்றுக் கொள்ளும் பற்றுச்சீட்டினை விண்ணப்பப்படிவத்தில் உரிய இடத்தில் ஒட்டுதல் வேண்டும். பற்றுச்சீட்டின் நிழற்படப்பிரதியொன்றினை தம்வசம் வைத்திருத்தல் பிரயோசனமாகும். எக் காரணம் கொண்டும் இக் கட்டணங்கள் மீளளிக்கப்பட மாட்டாது. இப் பரீட்சைக்காக செலுத்தப்படும் கட்டணம் வேறு எந்தவொரு பரீட்சைக்காக மாற்றுவதற்கு அனுமதி வழங்கப்படமாட்டாது.

06. வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்ட விண்ணப்பதாரிகள் மாத்திரம் விண்ணப்பித்துள்ளார்கள் என்னும் முன் அனுமானத்தின் படி விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் உரியவாறு பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்டு, விண்ணப்பங்களை பூர்த்தி செய்து, அதற்கு உரித்தான பற்றுச்சீட்டுடன் உரிய திகதியன்று அல்லது அதற்கு முன்னர் அனுப்பி வைத்துள்ள அலுவலர்களுக்கு பரீட்சை ஆணையாளர் நாயகம் அனுமதி அட்டையுடன் நேரசூசியின் பிரதியையும் அனுப்பி வைப்பார். பரீட்சைக்குத் தோற்றுகின்ற விண்ணப்பதாரிகள் பரீட்சை மண்டபத்தில் ஏற்கனவே அத்தாட்சிப்படுத்தப்பட்ட அனுமதி அட்டைகளில் தங்களுடைய கையொப்பங்களை இட்டு அதனை பரீட்சை மேற்பார்வையாளரிடம் சமர்ப்பித்தல் வேண்டும். அவ்வாறு அட்டைகள் கிடைக்கப்பெறாத விண்ணப்பதாரிகள் பரீட்சைக்கு தோற்றுவதற்கு அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

விண்ணப்பதாரிகளிடம் அனுமதி அட்டைகள் வழங்கியவுடன் அது தொடர்பாக இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் பத்திரிகை அறிவிப்பொன்றை வெளியிடும். அவ் அறிவிப்பு பிரசுரிக்கப்பட்டு 2/3 நாட்கள் கடந்த பின்னரும் அனுமதி அட்டை கிடைக்கப்பெறாவிடின் அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளவாறு அது தொடர்பாக இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்திற்கு அறிவித்தல் வேண்டும். அவ் அறிவித்தலில் குறிப்பிட்டுள்ளதன் படி விண்ணப்பித்த பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரியின் முழுப்பெயர், முகவரி மற்றும் தேசிய அடையாள அட்டை இலக்கம் என்பனவற்றை குறிப்பிடல் வேண்டும். கொழும்புக்கு வெளியே வதியும் விண்ணப்பதாரராயின் அவ் விபரங்களுடன் தொலை நகல் ஊடாக அனுமதி அட்டையின் பிரதியொன்றை அனுப்புவதற்கு ஏதுவாக விண்ணப்பதாரியின் தொலைநகல் இலக்கத்துடன் கூடிய கோரிக்கைக் கடிதத்தை அறிவித்தலில் குறிப்பிட்டுள்ள தொலைநகல் இலக்கத்துக்கு அனுப்பி விசாரித்தல் பயனுள்ளதாகும். மேலும் உறுதிப்படுத்தலுக்காக பரீட்சைத் திணைக்களத்தினால் கோரப்படும் போது விண்ணப்பதாரியின் வசமுள்ள விண்ணப்பத்தின் நிழற்படப்பிரதி, பணம் செலுத்தப்பட்டிருப்பின் பற்றுச் சீட்டின் பிரதி மற்றும் விண்ணப்பப்படிவம் அனுப்பிய கடிதத்தைப் பதிவு செய்த பற்றுச்சீட்டினையும் தயாராக வைத்திருத்தல் பயனுள்ளதாகும்.

விண்ணப்பதாரி ஒருவருக்கு அனுமதி அட்டைகள் வழங்குவது, அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு சகல தகைமைகளையும் பூர்த்தி செய்துள்ளதாக கருதப்படமாட்டாது.

07. விண்ணப்பப்படிவத்தில் மற்றும் பரீட்சைக்கான அனுமதி அட்டையிலும் விண்ணப்பதாரியின் ஒப்பத்தினை நிறுவனத் தலைவர் அல்லது அவரால் அதிகாரம் வழங்கப்பட்டுள்ள அலுவலரினால் சான்றுப்படுத்தப்படல் வேண்டும்.

08. பரீட்சைக்காக தோற்றும் முதல் திகதியன்றே பரீட்சை மேற்பார்வையாளரிடம் தனது ஒப்பத்தினை சான்றுப்படுத்திய அனுமதிப் பத்திரத்தினை ஒப்படைத்தல் வேண்டும்.

09. பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட அனுமதி அட்டையை பெற்றுள்ள அலுவலர்களுக்கு பரீட்சைக்குத் தோற்றுமுகமாக திணைக்களத் தலைவர்களால் கடமை விடுமுறை வழங்கப்பட வேண்டும். பிரயாணச் செலவுகளெதுவும் வழங்கப்படமாட்டாது.

10. இப் பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகள் மூலம் நடாத்தப்படுவதுடன் விண்ணப்பதாரிகள் தொடர்புடைய சேவைக்கு சேர்வதற்காக தோற்றிய மொழியில் அல்லது அரசகரும மொழியில் இரு வினாத்தாள்களுக்கும் விடையளிக்க வேண்டும். போட்டிப் பரீட்சையின்றி இச்சேவையிற் சேர்ந்த அலுவலர்கள் தாம் கல்வி கற்ற மொழியில் அல்லது அரசகரும மொழியில் இரு வினாத்தாள்களுக்கும் விடையளித்தல் வேண்டும். விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்ட பரீட்சை மொழி மூலத்தினை அதன் பின்னர் மாற்றுவதற்கு அனுமதிக்கப்பட மாட்டாது.

11. அலுவலர்கள் ஒவ்வொரு பாடத்திற்கு தனித்தனியாகவும் வேறுபட்ட தடவைகளிலும் தோற்ற முடியும். எவ்வாறாயினும், சித்தியடைவதற்கு ஒவ்வொரு பாடத்திற்கான மொத்த புள்ளிகளில் ஆகக் குறைந்தது 40 வீதம் என்ற வகையில் புள்ளிகளைப் பெற்றிருத்தல் வேண்டும்.

12. பரீட்சைப் பெறுபேறுகள் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்திற்கு வழங்கப்படுவதுடன் விண்ணப்பதாரிகளின் பெறுபேறுகள் அரச சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் இணையத்தளத்தில் பிரசுரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

13. **பரீட்சை நடைமுறை-** இப் பரீட்சை இரண்டு வினாத்தாள்களைக் கொண்டதாகும்.

1. பாட இலக்கம் (01) – பொது நிர்வாகம் மற்றும் நிதி முறைமைகளும் (100 புள்ளிகள்)

- பகுதி I - பொது நிர்வாகம் - நேரம் 1 ½ மணித்தியாலங்கள் - (50 புள்ளிகள்)

(அ) இலங்கை அரசியல் யாப்புத் தொடர்பான அடிப்படை அறிவு.

(ஆ) தாபன விதிக்கோவையின் VI, இலிருந்து, VIII, XII, XIV, XXIV, XXVII, XXVIII வரையிலான அத்தியாயங்கள் உள்ளடங்கும்.

(இ) 1973 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க அரச சுவடிக் காப்புச் சட்டம் மற்றும் 1981 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க தேசிய சுவடிக்காப்பு (திருத்தச்) சட்டம்.

(ஈ) 1994 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்கம் கொண்ட விஞ்ஞான தகவல் தொழில்நுட்ப அபிவிருத்திச் சட்டத்தின் III ஆம் பகுதி.

(உ) 1998 ஆம் ஆண்டின் 51 ஆம் இலக்கம் கொண்ட தேசிய நூலக மற்றும் ஆவணவாக்கல் சேவைகள் சபைச் சட்டம்.

(ஊ) 2003 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்கம் கொண்ட புலமைச் சொத்துச் சட்டம்.

- பகுதி II - நிதி முறைமைகள் - நேரம் 1 ½ மணித்தியாலங்கள் - (50 புள்ளிகள்)

(எ) நிதிப் பிரமாணம்

நூலகங்களின் மூலம் நிறைவேற்றப்படும் கணக்கு நடவடிக்கைகள் மற்றும் அது சார்ந்த ஒழுங்குவிதிகள்.

2. பாட இலக்கம் (02) – நூலக அமைப்பு – நேரம் 03 மணித்தியாலங்கள் - (100 புள்ளிகள்)

(அ) நூலக கட்டிடங்களும் உபகரணங்களும்

(ஆ) அரசாங்க வெளியீடுகளின் பயனும் பயன்படுத்தும் விதமும்

(இ) நூலகத் துறையிலுள்ள வலய மற்றும் சர்வதேச அமைப்புக்கள்

(ஈ) நூலக முகாமைத்துவ மூலோபாயங்கள்

(உ) நிதி முகாமைத்துவம்

(ஊ) கால முகாமைத்துவம்

(எ) மனித வள முகாமைத்துவம்

(ஏ) இலங்கைத் தகவல் தொழில்நுட்ப தொடர்பாடல் பணிகள்

(ஐ) நூலக கணினி மயப்படுத்தல் முறைமைகளும் வலையமைப்புக்களும்.

**கவனிக்க வேண்டியது**.- இப் பரீட்சையிற் சித்தியெய்துவதற்கு ஒவ்வொரு பாடத்திலும் குறைந்த பட்சம் 40% ஆன புள்ளிகள் பெற்றிருத்தல் வேண்டும்.

14. இப் பரீட்சை அறிவித்தலில் ஏற்பாடு செய்யப்பட்டிராத ஏதேனும் விடயம் தொடர்பாக இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் தீர்மானம் இறுதியானதாயிருக்கும்.

15. இவ் அறிவித்தலில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளுக்கிடையே ஏதேனும் வேறுபாடுகள் அல்லது முரண்பாடுகள் காணப்படின் சிங்கள அறிவித்தலே வலுவுள்ளதாகும்.

எஸ். ஆலோக்கபண்டார,
இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம்,
அரசாங்க சேவைகள், மாகாண சபைகள் மற்றும்
உள்ளூராட்சி அமைச்சு.

அரசாங்க சேவைகள், மாகாண சபைகள் மற்றும்
உள்ளூராட்சி அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 07,
2021, ஏப்பிறல் 27.

மாதிரி விண்ணப்பப்படிவம்

[ ]

(அலுவலக உபயோகத்திற்கு மட்டும்)

**இலங்கை அரச நூலகர் சேவை தரம் II இல் உள்ள அலுவலர்களுக்கான வினைத்திறன் காண் தடை தாண்டல் பரீட்சை 2018 (I) - 2021**

EFFICIENCY BAR EXAMINATION FOR OFFICERS IN GRADE II
OF THE SRI LANKA GOVERNMENT LIBRARIANS' SERVICE 2018 (I) - 2021

நீங்கள் பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம்:

சிங்களம் - 02
தமிழ் - 03
ஆங்கிலம் - 04 [ ]
(உரிய இலக்கத்தை கூட்டினுள் இடவும்)

உமக்கு உரித்தான சேவை (இதை பூரணப்படுத்த முன் வர்த்தமானி அறிவித்தலின் முதலாம் பந்தியின் குறிப்பைப் பார்க்கவும்) [ ]

---

1.0 1.1 முழுப் பெயர் (ஆங்கில கெப்பிடல் எழுத்துக்களில்) :..........................................................................

..........................................................................................................................................

(உதாரணம்: HERATH MUDIYANSELAGE SAMAN KUMARA GUNAWARDHANA)

1.2 இறுதியில் வரும் பெயரை முதலில் இட்டு முதலெழுத்துக்களுடன் கூடிய பெயர் (ஆங்கில கெப்பிடல் எழுத்தில்) :..........
..........................................................................................................................................

..........................................................................................................................................
(உதாரணம்: GUNAWARDHANA, H. M. S. K.)

1.3 முழுப்பெயர் (சிங்களத்தில் /தமிழில்) : ..........................................................................................

..........................................................................................................................................

2.0 சேவை நிலையமும் முகவரியும்:..........................................................................................................

2.1 அலுவலகத்தின் /திணைக்களத்தின் /நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்): ..........
..........................................................................................................................................

..........................................................................................................................................

2.2 அலுவலகத்தின் /திணைக்களத்தின் /நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி (சிங்களத்தில் /தமிழில்): ........................

..........................................................................................................................................

2.3 பரீட்சை அனுமதிப்பத்திரம் அனுப்ப வேண்டிய முகவரி (ஆங்கில கெப்பிடல் எழுத்துக்களில்):

..........................................................................................................................................

..........................................................................................................................................

3.0 3.1 பால் :

பெண் - 1 ☐

ஆண் - 0

(உரிய இலக்கத்தை கூட்டினுள் இடவும்)

3.2 தேசிய ஆள் அடையாள அட்டை இல.: ☐☐☐☐☐☐☐☐☐☐☐☐

3.3 தொலைபேசி இலக்கம் : கையடக்க ☐☐☐☐☐☐☐☐☐☐

அலுவலக ☐☐☐☐☐☐☐☐☐☐

4.0 நீங்கள் பரீட்சைக்கு தோற்றும் பாடங்களும் பாட இலக்கமும்:

| பாடம் | பாட இலக்கம் |
|---|---|
| | |
| | |

5.0 பிறந்த திகதி : ஆண்டு : ☐☐☐☐ மாதம் : ☐☐ திகதி : ☐☐

6.0 தற்போது வகிக்கும் பதவி :-

6.1 பதவி : ..........................................................................................

6.2 நியமனக் கடிதத்தின் இல. : ....................................................................

7.0 7.1 நீர் முதற் தடவையாக பரீட்சைக்கு விண்ணப்பிக்கிறீர்களா?: ..................................

7.2 இல்லாவிடின் செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணம்: ...............................................

7.3 தபாலகம் /உப தபாலகம் அல்லது மாவட்ட /பிரதேச செயலகம் : ....................................................................

7.4 பற்றுச்சீட்டு இலக்கம் : ..........................................................................................

7.5 திகதி: ......................................................................................

| |
|---|
| பற்றுச்சீட்டைக் கழறாதவாறு இங்கு ஒட்டிவிடவும்.<br>(பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியை தம்வசம் வைத்துக்கொள்ளவும்) |

*8.0* விண்ணப்பதாரியின் உறுதியுரை:

மேலே தரப்பட்டுள்ள விபரங்கள் சரியானவை என்றும், மேலே காட்டப்பட்டுள்ள அதே மொழியில் அப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகைமையுடையவரென்றும், ஒழுக்காற்றுத் தண்டனைக்கு ஆளாகவில்லை என்றும் நான் வெளிப் படுத்துகின்றேன். மேலும் பரீட்சையினை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடுதல் சம்பந்தமாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் ஒழுங்குவிதிகளுக்கு நான் கட்டுப்படுவதாகவும் இத்தால் உடன்படுகின்றேன்.

..........................................................,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி : .......................................

*9.0* திணைக்களத் தலைவரின் சான்றுரை :

(i) இப் பரீட்சார்த்தி இத் திணைக்களத்தின் சேவையிலுள்ள இலங்கை அரச நூலகர் சேவைத் தரம் II ஐச் சேர்ந்த ஓர் அலுவலரென்றும்,

(ii) மேலே தரப்பட்டுள்ள விபரங்கள் சரியானவை எனவும்;

(iii) இவருடைய வேலையும் நடத்தையும் எப்பொழுதும் திருப்தியானது எனவும், கடந்த ஐந்து வருட காலத்தில் (எச்சரிக்கைகள் தவிர) இவர் எவ்வகையான ஒழுக்காற்றுத் தண்டனைக்கும் ஆளாகவில்லை என்றும்;

(iv) இவர் இப்பரீட்சையில் தோற்றுவதற்குரிய தகைமையுடையவர் என்றும்;

(v) உரிய பரீட்சைக் கட்டணம் செலுத்தியுள்ளார் என்றும் இப் பற்றுச்சீட்டு ஒட்டப்பட்டுள்ளது என்றும்,

(தேவையற்ற சொற்களை வெட்டி விடவும்.)

நான் உறுதிப்படுத்துகின்றேன்.

.....................................
திணைக்களத் தலைவரின் கையொப்பமும்
பதவி முத்திரையும்.

பதவிப் பெயர் : .....................................

முகவரி : ..................................

திகதி : ...................................

*05-164*

---

### அரசாங்க சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

## இலங்கை அரசாங்க நூலகர் சேவையின் III ஆம் தரத்தைச் சேர்ந்த அலுவலர்களுக்கான வினைத்திறன் காண் தடை தாண்டல் பரீட்சை – 2018 - (I) 2021

*2024/ 35* ஆம் இலக்க *2017.06.21* ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டவாறான இலங்கை அரசாங்க நூலகர் சேவைப் பிரமாணக் குறிப்பின் 03 ஆம் பின்னிணைப்பின் ஏற்பாடுகளுக்கு ஏற்ப இலங்கை அரசாங்க நூலகர் சேவை தரம் III இல் உள்ள அலுவலர்களுக்கான வினைத்திறன் காண் தடை தாண்டல் பரீட்சை - 2021, ஓகத்து மாதம் கொழும்பில் நடாத்தப்படும். இவ் அறிவித்தலின் படி குறித்த வினைத்திறன் காண் தடை தாண்டல் பரீட்சைக்காக அரசாங்க சேவையின் இணைந்த சேவைக்குரிய அலுவலர்கள் மாத்திரமே விண்ணப்பிக்க முடியும்.

**குறிப்பு**.- இவ் வர்த்தமானி அறிவித்தலுக்கு ஒத்திசைவாக மாகாண அரசாங்க சேவையின் நூலகர் சேவை விண்ணப்பதாரிகளுக்கான ஏற்பாடுகள் உரிய மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினாலும் ஏனைய நிறுவனங்களின் விண்ணப்பதாரிகளுக்கான ஏற்பாடுகள் அவ்வந்த நிறுவனங்களினாலும் வெளியிடப்படும்.

“ஒவ்வொரு மாகாண அரசாங்க சேவை மற்றும் ஏனைய நிறுவனங்களிலுள்ள அலுவலர்களின் விண்ணப்பங்களை வசதியாக இனங்காண்பதற்கென விண்ணப்பங்களின் தலைப்பில் உரித்தான சேவைகள் அல்லது நிறுவனத்தினைக் குறிப்பிடும் போது குறியீட்டு இலக்கங்கள் பாவிக்கப்படல் வேண்டும். அதற்கிணங்க **“இணைந்த சேவையின் அலுவலர்களுக்கான குறியீட்டு இலக்கம் 10”** ஆகும். அவ் இலக்கத்தினை விண்ணப்பத்தின் வலது பக்க மேல் மூலையில் தங்களுக்குரிய சேவை என்னும் இடத்தில் குறிப்பிடப்படல் வேண்டும்.

02. (i) இப் பரீட்சையானது பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படுமென்பதுடன், பரீட்சை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடல் தொடர்பாக அவரால் விதிக்கப்பட்டுள்ள சட்டதிட்டங்களுக்கு பரீட்சார்த்திகள் கட்டுப்பட்டொழுகுதல் வேண்டும்.

(ii) பரீட்சார்த்திகளுக்கென விதிக்கப்பட்டுள்ள விதிகள் வர்த்தமானி அறிவித்தலின் ஆரம்பத்தில் பிரத்தியேகமாக அச்சிடப்பட்டுள்ளன. இவ் விதிகளை மீறுவோர் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு ஆளாவர்.

03. இப் பரீட்சைக்கான மாதிரி விண்ணப்பப்படிவம் இவ் அறிவித்தலின் இறுதியில் வெளியிடப்பட்டுள்ளது. பரீட்சார்த்திகள் தமது விண்ணப்பத்தை மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைய சரியாகவும், தெளிவாகவும் தயாரித்து தமது திணைக்களத்தலைவர் ஊடாக பதிவுத் தபாலில் 2021, யூன் மாதம் 14 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் " பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு (நிறுவனம்சார் மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைகள்) கிளை, இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், த. பெ. இல. 1503, கொழும்பு" எனும் முகவரியைச் சென்றடையும் வண்ணம் அனுப்பி வைத்தல் வேண்டும். விண்ணப்பங்களை பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பும் போது கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் பரீட்சையின் பெயர் மற்றும் தரம் என்பவற்றைக் குறிப்பிடுதல் வேண்டும். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

04. **விண்ணப்பதாரியின் ஆளடையாளம்.**- விண்ணப்பதாரிகள் தாம் தோற்றும் ஒவ்வொரு பாடத்தின் போதும் தமது ஆளடையாளத்தைப் பரீட்சை மேற்பார்வையாளர் திருப்தியுறும் வகையில் நிரூபித்தல் வேண்டும். இந் நோக்கத்திற்காக, கீழேயுள்ள ஆவணங்களுள் எவையேனும் ஒன்று ஏற்றுக்கொள்ளப்படும்:-

(i) தேசிய ஆள் அடையாள அட்டை ;
(ii) செல்லுபடியாகும் கடவுச் சீட்டு;
(iii) செல்லுபடியாகும் இலங்கை சாரதி அனுமதிப்பத்திரம்.

அவ்வாறே பரீட்சார்த்திகளின் ஆளடையாளத்தை உறுதிப்படுத்தும் வகையில் முகம் மற்றும் இரு காதுகளையும் மறைக்காது பரீட்சை மண்டபத்திற்கு பிரவேசிக்க வேண்டும். அவ்வாறு தனது ஆளடையாளத்தை உறுதிப்படுத்த மறுக்கும் விண்ணப்பதாரிகள் பரீட்சை மண்டபத்தினுள் நுழைய அனுமதிக்கப்படமாட்டார்கள். மேலும் பரீட்சை மண்டபத்திற்கு பிரவேசித்தது முதல் பரீட்சை நிறைவுபெற்று வெளியேறும் வரை பரீட்சை அதிகாரிகளுக்கு விண்ணப்பதாரியை அடையாளம் காண முடியுமான வகையில் முகம் மற்றும் இரு காதுகளையும் மறைக்காதிருத்தல் வேண்டும்.

05. **விண்ணப்பங்கள்** - விண்ணப்பங்கள் "ஏ4" அளவிலான ஒரு தாளின் இரு பக்கங்களையும் உபயோகித்து இல. 1.0 தொடக்கம் 6.0 வரை முதல் பக்கத்திலும் இல. 7.0 தொடக்கம் 10.0 வரை இரண்டாம் பக்கத்திலும் அமையும் வண்ணம் தயாரிக்கப்படல் வேண்டும். விண்ணப்பம் தட்டச்சில் பொறிக்கப்பட்டு அனுப்பப்படலாம் ஆனால் அது சரியாகவும் தெளிவாகவும் விண்ணப்பதாரியின் சொந்தக் கையெழுத்தில் பூர்த்தி செய்யப்பட்டிருத்தல் வேண்டும். மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கேற்ப அமையாத விண்ணப்பங்களும், பூரணமாக நிரப்பப்படாத விண்ணப்பங்களும் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். பூரணப்படுத்திய விண்ணப்பப்படிவத்தின் நிழற்படப் பிரதியொன்றை தம்வசம் வைத்திருத்தல் பயனுள்ளதாகும். பரீட்சை விண்ணப்பப்படிவத்தின் தலைப்பில் குறிப்பிட்டுள்ள பரீட்சையின் பெயர் சிங்கள விண்ணப்பப்படிவங்களில் சிங்களத்திற்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் தமிழ் விண்ணப்பப்படிவங்களில் தமிழ் மொழிக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் குறிப்பிடப்படல் வேண்டும். முழுமைப்படுத்திய விண்ணப்பம் பரீட்சை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்தை ஒத்ததாக உள்ளதா எனவும் மற்றும் சகல தகவல்களையும் உள்ளடக்கி சரியாக நிரப்பப்பட்டுள்ளதா எனவும் உரிய பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்டு அதன் விபரங்களை விண்ணப்பத்தில் உள்ளடக்கி பற்றுச்சீட்டு ஒட்டப்பட்டுள்ளதா என்பது பற்றியும் விண்ணப்பதாரியினால் பரீட்சித்துப் பார்த்தல் வேண்டும். விண்ணப்பப்படிவம் அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "இலங்கை அரசாங்க நூலகர் சேவையின் தரம் III இல் உள்ள அலுவலர்களுக்கான வினைத்திறன் காண் தடை தாண்டல் பரீட்சை -2018 (I) 2021 " எனக் குறிப்பிடவும்.

**போலியான தகவல்களுக்கான தண்டனை**.– விண்ணப்பத்தினை பூரணப்படுத்தும் போது மிகக் கவனமாக சரியான தகவல்களை நிரப்புதல் வேண்டும். பரீட்சையின் ஒழுங்கு விதிகளுக்கு ஏற்ப எவரேனும் ஒரு பரீட்சார்த்தி தகைமையற்றவர் எனத் தெரியவருமிடத்து பரீட்சைக்கு முன்னர் அல்லது பரீட்சை நடைபெறும் போது அல்லது பரீட்சையின் பின்னர் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பரீட்சார்த்த நிலையை இரத்துச்செய்ய முடியும்.

முதல் முறை இப் பரீட்சைக்குத் தோற்றும் அலுவலர்கள் எதுவித பரீட்சைக் கட்டணமும் செலுத்த வேண்டியதில்லை. எனினும், அடுத்து வரும் தடவைகளில் தோற்றும் அலுவலர்கள் சகல பாடங்களுக்கும் தோற்றுவதாயின் ரூபா 500 உம் தனியாக ஒரு பாடத்திற்கு மட்டும் தோற்றுவதாயின் ரூபா. 250 உம் பரீட்சைக் கட்டணமாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு 20-03-02-13 இற்கு வரவு வைத்து நாட்டின் எந்தவொரு தபாலகம் / உப தபாலகம் அல்லது மாவட்ட/ பிரதேச

செயலகத்துக்கோ செலுத்திப் பெற்றுக் கொள்ளும் பற்றுச்சீட்டினை விண்ணப்பப்படிவத்தில் உரிய இடத்தில் ஒட்டுதல் வேண்டும். பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியொன்றினை தம்வசம் வைத்திருத்தல் பிரயோசனமாகும். எக்காரணம் கொண்டும் இக் கட்டணங்கள் மீளளிக்கப்படமாட்டாது. இப் பரீட்சைக்காக செலுத்தப்படும் கட்டணம் வேறு எந்தவொரு பரீட்சைக்காக மாற்றுவதற்கும் அனுமதி வழங்கப்படாது.

06. வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்ட விண்ணப்பதாரிகள் மாத்திரம் விண்ணப்பித்துள்ளார்கள் என்னும் முன் அனுமானத்தின் படி விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் உரியவாறு பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்டு, விண்ணப்பங்களை பூர்த்தி செய்து, அதற்கு உரித்தான பற்றுச்சீட்டுடன் உரிய திகதியன்று அல்லது அதற்கு முன்னர் அனுப்பி வைத்துள்ள அலுவலர்களுக்கு பரீட்சை ஆணையாளர் நாயகம் அனுமதி அட்டையுடன் நேரசூசியின் பிரதியையும் அனுப்பி வைப்பார். பரீட்சைக்குத் தோற்றுகின்ற விண்ணப்பதாரிகள் பரீட்சை மண்டபத்தில் ஏற்கனவே அத்தாட்சிப்படுத்தப்பட்ட அனுமதி அட்டைகளில் தங்களுடைய கையொப்பங்களை இட்டு அதனை பரீட்சை மேற்பார்வையாளரிடம் சமர்ப்பித்தல் வேண்டும். அவ்வாறு அட்டைகள் கிடைக்கப்பெறாத விண்ணப்பதாரிகள் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதிக்கப்படமாட்டார்கள்.

விண்ணப்பதாரிகளுக்கு அனுமதி அட்டைகள் வழங்கப்பட்டவுடன் அது தொடர்பாக இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் பத்திரிகை அறிவிப்பொன்றை வெளியிடும். அவ் அறிவிப்பு பிரசுரிக்கப்பட்டு 2 அல்லது 3 நாட்கள் கடந்த பின்னரும் அனுமதி அட்டை கிடைக்கப்பெறாவிடின் அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளவாறு அது தொடர்பாக இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்திற்கு அறிவித்தல் வேண்டும். அவ் அறிவித்தலில் குறிப்பிட்டுள்ளதன் படி விண்ணப்பித்த பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரியின் முழுப்பெயர், முகவரி மற்றும் தேசிய அடையாள அட்டை இலக்கம் என்பனவற்றைக் குறிப்பிடல் வேண்டும். கொழும்புக்கு வெளியே வதியும் விண்ணப்பதாரராயின் அவ் விபரங்களுடன் தொலை நகல் ஊடாக அனுமதி அட்டையின் பிரதியொன்றை அனுப்புவதற்கு ஏதுவாக விண்ணப்பதாரியின் தொலைநகல் இலக்கத்துடன் கூடிய கோரிக்கைக் கடிதத்தை அறிவித்தலில் குறிப்பிட்டுள்ள தொலைநகல் இலக்கத்துக்கு அனுப்பி விசாரித்தல் பயனுள்ளதாகும். மேலும் உறுதிப்படுத்தலுக்காக பரீட்சைத் திணைக்களத்தினால் கோரப்படும் போது விண்ணப்பதாரியின் வசமுள்ள விண்ணப்பத்தின் நிழற்படப் பிரதி, பணம் செலுத்தப்பட்டிருப்பின் பற்றுச் சீட்டின் பிரதி மற்றும் விண்ணப்பப்படிவம் அனுப்பிய கடிதத்தைப் பதிவு செய்த பற்றுச்சீட்டினையும் தயாராக வைத்திருத்தல் பயனுள்ளதாகும்.

விண்ணப்பதாரி ஒருவருக்கு அனுமதி அட்டை வழங்குவது, அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு சகல தகைமைகளையும் பூர்த்தி செய்துள்ளதாக கருதப்படமாட்டாது.

07. விண்ணப்பப்படிவத்தில் மற்றும் பரீட்சைக்கான அனுமதி அட்டையிலும் விண்ணப்பதாரியின் ஒப்பத்தினை நிறுவனத் தலைவர் அல்லது அவரால் அதிகாரம் வழங்கப்பட்டுள்ள அலுவலரினால் சான்றுப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

08. பரீட்சைக்காகத் தோற்றும் முதல் திகதியன்றே பரீட்சை மேற்பார்வையாளரிடம் தனது ஒப்பத்தினை சான்றுப்படுத்திய அனுமதிப் பத்திரத்தினை ஒப்படைத்தல் வேண்டும்.

09. பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட அனுமதி அட்டையை பெற்றுள்ள அலுவலர்களுக்கு, பரீட்சைக்குத் தோற்றுமுகமாக திணைக்களத் தலைவர்களால் கடமை விடுமுறை வழங்கப்பட வேண்டும். பிரயாணச் செலவுகளெதுவும் வழங்கப்படமாட்டாது.

10. இப் பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகள் மூலம் நடாத்தப்படுதுடன் விண்ணப்பதாரிகள் தொடர்புடைய சேவைக்கு சேர்வதற்காக தோற்றிய மொழியில் அல்லது அரசகரும மொழியில் அல்லது இரு வினாத் தாள்களுக்கும் விடையளிக்க வேண்டும். போட்டிப் பரீட்சையின்றி இச்சேவையிற் சேர்ந்த அலுவலர்கள் தாம் கல்வி கற்ற மொழியில் அல்லது அரசகரும மொழியில் இரு வினாத்தாள்களுக்கும் விடையளித்தல் வேண்டும். விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்ட பரீட்சை மொழி மூலத்தினை அதன் பின்னர் மாற்றுவதற்கு அனுமதிக்கப்பட மாட்டாது.

11. அலுவலர்கள் ஒவ்வொரு பாடத்திற்கும் தனித்தனியாகவும் வேறுபட்ட தடவைகளிலும் தோற்ற முடியும். எவ்வாறாயினும், சித்தியடைவதற்கு ஒவ்வொரு பாடத்திற்கான மொத்த புள்ளிகளில் ஆகக் குறைந்தது 40% புள்ளிகளைப் பெற்றிருத்தல் வேண்டும்.

12. பரீட்சைப் பெறுபேறுகள் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் இணைந்த சேவைகள் பணிப்பளர் நாயகத்திற்கு வழங்கப்படுவதுடன் விண்ணப்பதாரிகளின் பெறுபேறுகள் அரசாங்க சேவைகள். மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் இணையத்தளத்தில் பிரசுரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

13. **பரீட்சை நடைமுறை**. - இப் பரீட்சை இரண்டு வினாத்தாள்களைக் கொண்டதாகும்.

1. பாட இலக்கம் (01) – பொது நிர்வாகமும் நிதி முறைமைகளும் (100 புள்ளிகள்)

- பகுதி I - பொது நிர்வாகம் - நேரம் 1 ½ மணித்தியாலங்கள் - (50 புள்ளிகள்)

(அ) தாபன விதிக்கோவையின் VI, இலிருந்து, VIII, XII, XIV, XXIV, XXVII, XXVIII வரையிலான அத்தியாயங்கள் உள்ளடங்கும்.

(ஆ) 2009, பெப்புருவரி 20 ஆந் திகதிய இல. 1589/ 30 ஐக் கொண்ட அதிவிசேட வர்த்தமானியின் மூலம் பிரசுரிக்கப்பட்ட அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் அலுவலக நடைமுறை விதிமுறைகள்.

(இ) 1974 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க இலங்கை நூலக சங்கம் (கூட்டிணைப்பு) சட்டம் மற்றும் 2004 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க திருத்தச் சட்டம்.

- பகுதி II - நிதி முறைமைகள் - நேரம் 1 ½ மணித்தியாலங்கள் - (50 புள்ளிகள்)

(இ) நிதிப் பிரமாணம் (X அத்தியாயம் தவிர) நூலகங்களின் மூலம் நிறைவேற்றப்படும் கணக்கு நடவடிக்கைகள் மற்றும் அவற்றுடன் சம்பந்தப்பட்ட ஒழுங்குவிதிகள்.

2. பாட இலக்கம் (02) – நூலக அமைப்பு – நேரம் 03 மணித்தியாலங்கள் - (100 புள்ளிகள்)

(அ) மாகாண நூலகப் பட்டயம்
(ஆ) நூலகக் குழுக்கள்
(இ) நூலகப் பொருட்களின் காப்பீடு
(ஈ) வாசகர் கல்வி மற்றும் மக்கள் தொடர்பாடல்
(உ) நூலக வகைகளும், சேவைகளும்
(ஊ) நூலக முகாமைத்துவத்தில் கவனத்திற் கொள்ளக் கூடிய கோட்பாடுகளும் மூலோபாயங்களும்
(எ) நூலகங்களில் செயற்படுத்தக்கூடிய விஸ்தரிப்புச் சேவைகள்

**கவனிக்க வேண்டியது**.- இப் பரீட்சையிற் சித்தியெய்துவதற்கு ஒவ்வொரு பாடத்திலும் குறைந்த பட்சம் 40% ஆன புள்ளிகள் பெற்றிருத்தல் வேண்டும்.

14. இப் பரீட்சை அறிவித்தலில் ஏற்பாடு செய்யப்பட்டிராத ஏதேனும் விடயம் தொடர்பாக இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் தீர்மானம் இறுதியானதாயிருக்கும்.

15. இவ் அறிவித்தலில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளுக்கிடையே ஏதேனும் வேறுபாடுகள் அல்லது முரண்பாடுகள் காணப்படின் சிங்கள அறிவித்தலே வலுவுள்ளதாகும்.

எஸ். ஆலோக்கபண்டார,
இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம்,
அரசாங்க சேவைகள், மாகாண சபைகள் மற்றும்
உள்ளூராட்சி அமைச்சு.

அரசாங்க சேவைகள், மாகாண சபைகள் மற்றும்
உள்ளூராட்சி அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 07,
2021, ஏப்பிறல் 27.

மாதிரி விண்ணப்பப்படிவம்

(அலுவலக உபயோகத்திற்கு மட்டும்)

**இலங்கை அரசாங்க நூலகர் சேவை தரம் III இல் உள்ள அலுவலர்களுக்கான வினைத்திறன் காண் தடை தாண்டல் பரீட்சை 2018 (I) - 2021**

**EFFICIENCY BAR EXAMINATION FOR OFFICERS IN GRADE III OF THE SRI LANKA LIBRARIANS' SERVICE – 2018 (I) 2021**

நீங்கள் பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம்:

சிங்களம் - 02
தமிழ் - 03
ஆங்கிலம் - 04
(உரிய இலக்கத்தை கூட்டினுள் இடவும்)

உமக்கு உரித்தான சேவை (இதை பூரணப்படுத்த முன் வர்த்தமானி அறிவித்தலின் முதலாம் பந்தியின் குறிப்பைப் பார்க்கவும்.)

1.0 1.1 முழுப் பெயர் (ஆங்கில கெப்பிடல் எழுத்தில்) :..........................................................................

..........................................................................................................................................

(உதாரணம்: HERATH MUDIYANSELAGE SAMAN KUMARA GUNAWARDHANA)

1.2 இறுதியில் வரும் பெயரை முதலிலிட்டு முதலெழுத்துக்களுடன் கூடிய பெயர் (ஆங்கில கெப்பிடல் எழுத்தில்) :.............
..........................................................................................................................

..........................................................................................................................................
(உதாரணம்: GUNAWARDHANA, H. M. S. K.)

1.3 முழுப்பெயர் (சிங்களத்தில் /தமிழில்) : ..........................................................................................

..........................................................................................................................................

2.0 சேவை நிலையமும் முகவரியும்:........................................................................................................

2.1 அலுவலகத்தின் /திணைக்களத்தின் /நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி (ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்): ..
.......................................................................................................................................................

.......................................................................................................................................................

2.2 அலுவலகத்தின் /திணைக்களத்தின் /நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி (சிங்களம் /தமிழ்): .........................

.......................................................................................................................................................

2.3 பரீட்சை அனுமதிப்பத்திரம் அனுப்ப வேண்டிய முகவரி (ஆங்கில கெப்பிடல் எழுத்தில்):

..........................................................................................................................................

..........................................................................................................................................

3.0 3.1 பால் :

பெண் - 1
ஆண் - 0
(உரிய இலக்கத்தை கூட்டினுள் இடவும்)

3.2 தேசிய ஆள் அடையாள அட்டை இல.: | | | | | | | | | | | | |

4.0 தொலைபேசி இலக்கம் : கையடக்க | | | | | | | | | | |

அலுவலக | | | | | | | | | | |

5.0 நீங்கள் பரீட்சைக்குத் தோற்றும் பாடங்களும் பாட இலக்கமும்:

| பாடம் | பாட இலக்கம் |
|---|---|
| | |
| | |

6.0 பிறந்த திகதி : ஆண்டு : | | | | | மாதம் : | | | திகதி : | | |

7.0 தற்போது வகிக்கும் பதவி :-

7.1 பதவி : ..............................................................................................................

7.2 நியமனக் கடிதத்தின் இல. : ........................................................................

8.0 8.1 நீர் முதற் தடவையாக பரீட்சைக்கு விண்ணப்பிக்கிறீர்களா?: ..................................

8.2 இல்லாவிடின் செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணம்: ...............................................

8.3 தபாலகம் /உப தபாலகம் அல்லது மாவட்ட /பிரதேச செயலகம் : ...................................................................................

8.4 பற்றுச்சீட்டு இலக்கம் : ..................................................................................................

8.5 திகதி: .........................................................................................

| பற்றுச்சீட்டைக் கழறாதவாறு இங்கு ஒட்டிவிடவும்.<br>(பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியை தம்வசம் வைத்துக்கொள்ளவும்) |
|---|

9.0 விண்ணப்பதாரியின் சான்றுரை:

மேலே தரப்பட்டுள்ள விபரங்கள் சரியானவை என்றும், மேலே காட்டப்பட்டுள்ள அதே மொழியில் அப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகைமையுடையவனென்றும், ஒழுக்காற்றுத் தண்டனைக்கு ஆளாகவில்லை என்றும் நான் வெளிப் படுத்துகின்றேன். மேலும் பரீட்சையினை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடுதல் சம்பந்தமாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் ஒழுங்குவிதிகளுக்கு நான் கட்டுப்படுவதாகவும் இத்தால் உடன்படுகின்றேன்.

..........................................................,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி : .......................................

10.0 திணைக்களத் தலைவரின் உறுதியுரை :

(i) இப் பரீட்சார்த்தி இத் திணைக்களத்தின் சேவையிலுள்ள இலங்கை அரசாங்க நூலகர் சேவை தரம் III ஐச் சேர்ந்த ஓர் அலுவலரென்றும்,
(ii) மேலே தரப்பட்டுள்ள விபரங்கள் சரியானவை எனவும்,
(iii) இவருடைய வேலையும் நடத்தையும் எப்பொழுதும் திருப்தியானது எனவும், கடந்த ஐந்து வருட காலத்தில் (எச்சரிக்கைகள் தவிர) இவர் எவ்வகையான ஒழுக்காற்றுத் தண்டனைக்கும் ஆளாகவில்லை என்றும்.
(iv) இவர் இப்பரீட்சையில் தோற்றுவதற்குரிய தகைமையுடையவர் என்றும்,
(v) உரிய பரீட்சைக் கட்டணம் செலுத்தியுள்ளார் என்றும் இப் பற்றுச்சீட்டு ஒட்டப்பட்டுள்ளது என்றும் (தேவையற்ற சொற்களை வெட்டிவிடவும்)

நான் சான்றுப்படுத்துகின்றேன்.

.........................................
திணைக்களத் தலைவரின் கையொப்பமும்
பதவி முத்திரையும்.

பதவிப் பெயர் : ...................................
முகவரி : ...................................
திகதி : ..................................

05-165

## அரசாங்க சேவைகள் ஆணைக்குழு

## வர்த்தக அமைச்சின் வர்த்தக திணைக்களத்திற்கு உதவிப் பணிப்பாளர்களை, (தரம் III நிறைவேற்றுத்தரச் சேவை) ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2021

வர்த்தக அமைச்சின் வர்த்தக திணைக்களத்தில் உதவி வர்த்தகப் பணிப்பாளர் பதவிக்காக (06 வெற்றிடங்கள்) இந்த அறிவித்தலில் விதித்துரைக்கப்பட்ட தேவையான தகைமைகளைக் கொண்டிருக்கும் பரீட்சார்த்திகளிடமிருந்து விண்ணப்பங்கள் இத்தால் கோரப்படுகின்றன.

இந்த அறிவித்தலின் இறுதியில் தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்தின்படி தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ள திகதியன்று அல்லது அதற்கு முன்பாக கிடைக்கத்தக்கதாக "பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், ஸ்தாபனம், பரீட்சைகள் மற்றும் அமைப்பு கிளை, இலங்கை பரீட்சைகள் திணைக்களம், தபால் பெட்டி இல. 1503, கொழும்பு" எனும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும். விண்ணப்பத்தினைக் கொண்டுள்ள தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் "வர்த்தக திணைக்களத்துக்கான தரம் III இனைச் சேர்ந்த உதவிப் பணிப்பாளர்களினை ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை" எனத் தெளிவாகக் குறிப்பிடப்படுதல் வேண்டும்.

(அ) விண்ணப்ப முடிவுத் திகதி 2021.06.04 ஆகும்.

**குறிப்பு**.- மேற்குறித்த பதவிக்காக விண்ணப்பிக்கும் விண்ணப்பமானது காணாமல் போதல் அல்லது விண்ணப்பம் கிடைப்பதில் ஏற்படும் தாமதம் மற்றும் ஏனைய அது தொடர்பான முறைப்பாடுகள் கவனத்தில் கொள்ளப்பட மாட்டாது. விண்ணப்ப முடிவுத் திகதி வரையில் விண்ணப்பிப்பதில் ஏற்படும் காலதாமதத்தினால் ஏற்படும் இழப்புகளுக்கு விண்ணப்பதாரிகளே பொறுப்பாவர்.

1. **ஆட்சேர்ப்பு நடைமுறை**.- விதித்துரைக்கப்பட்ட தகைமைகளினை திருப்திகரமாகக் கொண்டுள்ள பரீட்சார்த்திகள், எழுத்துமூலப் பரீட்சை மற்றும் அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் நடாத்தப்படும் நேர்முகத் தேர்வு ஆகியவற்றில் பெற்றுக்கொள்ளப்படும் அதிகூடிய புள்ளிகளின் அடிப்படையில் தெரிவுசெய்யப்படுவார்கள்.

2. **பதவி தொடர்பான நியதிகள்** :

(i) இந்தப் பதவி நிரந்தரமானது. தங்களின் ஓய்வூதியத் திட்டம் தொடர்பில் எதிர்காலத்தில் அரசாங்கத்தினால் எடுக்கப்படும் கொள்கைத் தீர்மானங்களுக்கு உட்படுவீர்கள்.

(ii) அலுவலர்கள் 3 வருட தகுதிகாண் காலப்பகுதியினைக் கொண்டிருப்பதுடன் தகுதிகாண் காலப்பகுதியினுள் முதலாவது வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

(iii) 2014/01 ஆம் இலக்க அரசாங்க நிருவாக சுற்றறிக்கையின்படி சேவையில் நியமனம் செய்யப்பட்ட திகதியிலிருந்து 5 வருட காலப்பகுதியினுள் விதித்துரைக்கப்பட்ட அரச கரும மொழி வினைத்திறனைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். அரச கரும மொழி தவிர்ந்த வேறு ஏதேனும் அரச கரும மொழியில் சேவையில் இணைந்துகொண்ட அலுவலர்கள் ஒரு அரச கரும மொழியில் முதல் 3 வருட காலப்பகுதியினுள்ளும் மற்றைய மொழியில் 6 வருடங்களினுள்ளும் வினைத்திறன் தேர்ச்சியினைப் பெறுதல் வேண்டும். இரண்டாம் மொழியில் பிரிவு 1 இல் சித்தியடையதல் வேண்டும்.

(iv) இந்த நியமனமானது அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட நடைமுறை சட்டவிதிகள், இலங்கைச் சனநாயக சோசலிக் குடியரசின் தாபனவிதிக் கோவையின் ஏற்பாடுகள் மற்றும் அரசாங்க மற்றும் ஏனைய திணைக்களம்சார் கட்டளைகளுக்குட்படும்.

(v) அலுவலர்கள் காலத்திற்குக்காலம் வெளிநாடுகளில் சேவையாற்றுவதற்கு நியமிக்கப்படலாம். இத்தகைய சந்தர்ப்பங்களில் அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட படிகளினைப் பெறுவதற்கு உரித்துடையவர்களாவர்.

3. **சம்பள அளவுத்திட்டம்**.- பொது நிருவாக சுற்றறிக்கை இல. 06/ 2006 இன்படி, இந்தப் பதவிக்கு இணைக்கப்பட்டுள்ள மாதாந்த சம்பள அளவுத்திட்டம் - SL 1/2006 ரூபா 47,615 - 10 x 1,335 - 8 x 1,630 - 17 x 2,170 - ரூபா 1,10,895.

4.

4.1 கல்விசார் தகைமைகள் :

(i) பல்கலைக்கழகங்கள் மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து அல்லது பட்டப்படிப்பினை வழங்கும் நிறுவனமாக பல்கலைக்கழகங்கள் மானியங்கள் ஆணைக்குழுவினால்

அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றிலிருந்து பொருளாதாரம், வர்த்தகம், வியாபார முகாமைத்துவம், சந்தைப்படுத்தல், புள்ளிவிபரவியல், கணக்கியல் அல்லது பொது நிருவாகத்தில் விசேட பட்டத்தில் (சிறப்பு) முதலாம் வகுப்பு அல்லது இரண்டாம் வகுப்பில் சித்தியினைப் பெற்றிருத்தல் வேண்டும்.

அல்லது

(ii) பல்கலைக்கழகங்கள் மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து அல்லது பட்டப்படிப்பினை வழங்கும் நிறுவனமாக பல்கலைக்கழகங்கள் மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றிலிருந்து பொருளாதாரம், வர்த்தகத்தில் பொது பட்டப்படிப்பில் முதலாம் வகுப்பு அல்லது இரண்டாம் வகுப்பில் சித்தியினைப் பெற்றிருத்தல் வேண்டும்.

அல்லது

(iii) பல்கலைக்கழகங்கள் மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து அல்லது பட்டப்படிப்பினை வழங்கும் நிறுவனமாக பல்கலைக்கழகங்கள் மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றிலிருந்து சட்டத்துறையில் பட்டப்படிப்பினை நிறைவுசெய்திருத்தல் வேண்டும்.

4.2 **தொழில்சார் தகைமைகள்**.- மேலே 4 இன் (iii) இல் விதித்துரைக்கப்பட்ட கல்விசார் தகைமைகளினைப் பூர்த்திசெய்யும் பரீட்சார்த்திகள் உச்ச நீதிமன்றத்தில் (இலங்கையில்) சட்டத்தரணியாக சத்தியப்பிரமாணம் செய்திருத்தல் வேண்டும்.

4.3 **தொழில்சார் அனுபவம்**.- மேலே 4 இன் (iii) இல் விதித்துரைக்கப்பட்ட கல்விசார் தகைமைகளினைப் பூர்த்திசெய்யும் பரீட்சார்த்திகள் வர்த்தகம் அல்லது சர்வதேச வர்த்தக சட்டத்துறையில் சட்டத்தரணியாக ஆகக்குறைந்தது 3 வருடங்களாவது சேவையாற்றிய அனுபவத்தினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

5. **வயது எல்லை** : விண்ணப்ப முடிவுத் திகதியின் போது 21 வயதுக்குக் குறையாமலும் 35 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். (அதற்கிணங்க, 1986.05.31 ஆந் திகதியன்று அல்லது அதன் பின்னரும் 2000.05.31 ஆந் திகதியன்று அல்லது அதன் முன்னரும் பிறந்த திகதியினையுடைய பரீட்சார்த்திகள் விண்ணப்பிப்பதற்குத் தகுதியானவர்களாவர்.)

6. **உடல் ஆரோக்கியம்**.- அனைத்துப் பரீட்சார்த்திகளும் நாட்டின் எப்பகுதியிலேனும் வெளிநாடுகளிலும் சேவையாற்று வதற்கான உடல் மற்றும் உள ரீதியான ஆரோக்கிய நிலையினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

7. **ஏனையவை** :

(i) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் ;
(ii) சிறந்த நல்லொழுக்கத்தினைக் கொண்டிருத்தல் வேண்டும் ;
(iii) விண்ணப்ப முடிவுத் திகதியின்போது பதவிக்குத் தேவையான அனைத்து தகைமைகளையும் கொண்டிருத்தல் வேண்டும்.

8.1 **எழுத்துமூலப் பரீட்சை** :

(i) அரசாங்க சேவை ஆணைக்குழுவுக்காக பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் 2021, ஓகத்து மாதம் கொழும்பில் நடாத்தப்படும் ;
(ii) பரீட்சையானது சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் நடாத்தப்படும் ;
(iii) பரீட்சார்த்திகள் மேலே குறிப்பிடப்பட்டுள்ள மொழிகளில் ஏதேனுமொன்றில் பரீட்சையில் தோற்றுவதற்கு அனுமதிக்கப்படுவதுடன் அவ்வாறு தெரிவுசெய்யப்படும் மொழி மூலமாகவே அனைத்து வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும். விண்ணப்பிக்கப்பட்ட மொழிமூலத்தினைப் பின்னர் மாற்றுவதற்கு அனுமதியளிக்கப்பட மாட்டாது.
(iv) எழுத்துமூலப் பரீட்சையானது பின்வரும் வினாத்தாள்களைக் கொண்டிருக்கும் :

| விடய தான இல. | விடயம் | காலம் | புள்ளிகள் | ஆகக் குறைந்த சித்தி புள்ளிகள் |
|---|---|---|---|---|
| 01 | நுண் அறிவுப் பரீட்சை | 1 மணி | 100 | 40% |
| 02 | பொது வினாத் தாள் (வர்த்தகம் மற்றும் பொருளியல்) | 2 மணி | 100 | 40% |
| 03 | ஆங்கிலம் | 2 மணி | 100 | 40% |
| 04 | கட்டுரையும் சுருக்கமும் | 2 மணி | 100 | 40% |

**எழுத்துமூலப் பரீட்சைக்குரிய பாடவிதானங்கள் :**

(அ) *நுண்ணறிவுப் பரீட்சை.-* பரீட்சார்த்தியின் தர்க்க ரீதியான ஆற்றல், பகுப்பாய்வு சிந்தனை மற்றும் தீர்மானம் நிறைவேற்றல் என்பவற்றினைத் தீர்மானிப்பதற்கான பல்தேர்வு வினாக்களைக் கொண்டிருக்கும்.

(ஆ) *பொது வினாத்தாள் (வர்த்தகம் மற்றும் பொருளியல்).-* பரீட்சார்த்தியின் இலங்கை மற்றும் வெளிநாடுகள் தொடர்பான வர்த்தக மற்றும் பொருளாதார அறிவை பரிசோதிப்பதற்கான வினாக்களைக் கொண்டிருக்கும்.

(இ) *ஆங்கிலம்.-* ஆங்கில இலக்கணம், சொல் வளம் மற்றும் ஆங்கில மொழியினைப் புரிந்துகொள்ளுதல் தொடர்பில் பரீட்சார்த்தியின் அறிவினைத் தீர்மானிப்பதற்கான வினாக்களைக் கொண்டிருக்கும்.

(ஈ) *கட்டுரையும் சுருக்கமும்.-* தரப்படும் ஒன்று அல்லது பல்வேறு விடயங்கள் தொடர்பில் கட்டுரை/கட்டுரைகளினை எழுதுதல் வேண்டும். பாடத்துறையுடன் தொடர்பில்லாத வகையில் விடய தானங்கள் தெரிவுசெய்யப்படும். ஆனால் பரீட்சார்த்தியின் வெளிப்படுத்துகை, கற்பனை வளம், சிந்திக்கும் ஆற்றல், பொது அறிவு மற்றும் மொழித்திறன்கள் என்பன தொடர்பான ஆற்றல் பரிசோதிக்கப்படும்.

கிரகித்தல் என்பது தரப்படும் பந்தியின் கருத்தினைப் புரிந்துகொள்வதற்கான ஆற்றலினை பரிசோதிப்பதனையும் அதனை விளக்கமாக முறையீடு முறையில் சுருக்க வடிவில் வெளிப்படுத்துவதனையும் குறிக்கின்றது.

8.2 **நேர்முகப் பரீட்சை :**

(i) வெற்றிடங்களின் எண்ணிக்கைக்குச் சமமாக பரீட்சார்த்திகள், அனைத்துப் பாடங்களிலும் 40% இற்கும் அதிகமான புள்ளிகளினைப் பெற்றுள்ள பரீட்சார்த்திகளிடமிருந்து கூடிய புள்ளியின் அடிப்படையில் நேர்முகப் பரீட்சைக்காக அழைக்கப்படுவார்கள்.

(ii) அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும் நேர்முகப் பரீட்சை சபையானது பரீட்சார்த்திகளின் அடிப்படை தகைமைகள் மற்றும் சான்றிதழ்களினை ஆய்வு செய்யும்.

8.3 **பெறுபேறுகளினை வெளியீடு செய்தல்.-** 8.1 ஆம் பந்திக்கமைவாக, வெற்றிடங்களின் எண்ணிக்கைக்குச் சமமாக (அறிவித்தலில் குறிப்பிடப்பட்டவாறு) தெரிவுசெய்யப்பட்ட தகைமை வாய்ந்த பரீட்சார்த்திகளின் பெயர்ப்பட்டியலொன்று அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளரிடம் வழங்கப்படும். பரீட்சைக்குத் தோற்றிய அனைத்துப் பரீட்சார்த்திகளுக்குமான பெறுபேறுகள் தபாலில் அனுப்பி வைக்கப்படும். அல்லது www.results.exams.gov.lk எனும் இணையத்தள முகவரியில் வெளியிடப்படும்.

9. **விண்ணப்ப நடைமுறை :**

(i) பரீட்சைக் கட்டணம் ரூபா 1,200 ஆகும். நாடு பூராகவுமுள்ள ஏதேனும் தபால் அலுவலகத்தில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் 2003-02-13 எனும் வருமானத் தலைப்பில் செலவு வைக்கப்பட்டு அதன் பற்றுச்சீட்டினை விண்ணப்பப்படிவத்தில் அதற்கென ஒதுக்கப்பட்ட இடத்தில் முறையாக ஒட்டுதல் வேண்டும். பற்றுச்சீட்டின் போட்டோப் பிரதியினை வைத்திருப்பது அநுகூலமானதாகும்.

**குறிப்பு.-** ஒரு தடவை செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணமானது எத்தகைய சந்தர்ப்பத்திலேனும் அல்லது விண்ணப்பத்தினை மீளப்பெறுதல் அல்லது பரீட்சைக்குத் தோற்றாமல் இருத்தல் அல்லது பரீட்சைக்குத் தோற்றிய பின்னர் தகைமையிழந்தமை கண்டுபிடிக்கப்பட்டமை போன்ற காரணங்களினால் முழுமையாகவோ அல்லது பகுதியளவிலோ மீளளிக்கப்பட மாட்டாது.

(ii) பரீட்சையானது 2021, ஓகத்து மாதம் கொழும்பில் நடாத்தப்படும்.

(iii) முறையாகப் பூர்த்திசெய்யப்படாத விண்ணப்பங்கள் விண்ணப்பதாரிக்கு எவ்வித அறிவித்தலும் வழங்கப்படாமல் நிராகரிக்கப்படும்.

**குறிப்பு.-** பரீட்சைக்கான அனுமதி அட்டையினை வழங்குவதானது பரீட்சைக்குத் தோற்றுவதற்கான அனைத்துத் தகைமைகளினையும் விண்ணப்பதாரி கொண்டுள்ளார் என்பதாகாது.

(iv) விண்ணப்பமானது தரப்பட்ட மாதிரிக்கமைவாக ஏ4 தாளினைப் பயன்படுத்தி பிரிவு 1 இலிருந்து 8 வரையிலான பகுதிகள் முதல் பக்கத்திலும் மீதிப் பகுதிகள் இரண்டாம் மற்றும் மூன்றாம் பக்கங்களிலும் அமையக்கூடியதாக தயாரிக்கப்படுதல் வேண்டும். எல்லாப் பதிவுகளும் விண்ணப்பதாரியின் சொந்தக் கையெழுத்தில் தெளிவாக மேற்கொள்ளப்படுதல் வேண்டும். தலையங்கத்திலுள்ள பரீட்சையின் பெயரானது சிங்கள மற்றும் தமிழ் மொழி மூலமான விண்ணப்பங்களில் மேலதிகமாக ஆங்கில மொழியிலும் எழுதப்படுதல் வேண்டும். மாதிரி விண்ணப்பத்துடன் இணங்காத மற்றும் முழுமையற்ற விண்ணப்பங்களும் விண்ணப்பதாரருக்கு எந்த அறிவிப்பும் இல்லாமல் நிராகரிக்கப்படும். விண்ணப்பதாரர் நகலை வைத்திருப்பது பயனுள்ளதாக இருக்கும்.

(v) குறித்துரைக்கப்பட்ட ஒவ்வொரு விடயத்தினையும் கொண்டிருக்காத விண்ணப்பம் நிராகரிப்பதற்கு ஏதுவாகும். தபாலில் ஏற்படும் தாமதம் அல்லது தொலைந்துபோதல் போன்ற முறைப்பாடுகள் கவனத்தில் கொள்ளப்பட மாட்டாது.

(vi) விண்ணப்பப் படிவமானது விண்ணப்பதாரி பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலத்திலேயே தயாரிக்கப்படுதல் வேண்டும்.

(vii) பூரணப்படுத்திய விண்ணப்பங்கள், "பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், ஸ்தாபனம். பரீட்சைகள் மற்றும் அமைப்பு பிரிவு, இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம், தபால் பெட்டி இலக்கம் 1503, கொழும்பு" எனும் முகவரிக்கு, 2021, மே மாதம் 31 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னதாக கிடைக்கும் வகையில் பதிவுத்தபாலில் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும். விண்ணப்ப முடிவுத் திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. "வர்த்தக திணைக்களத்திற்கான உதவிப் பணிப்பாளர்கள் (நிறைவேற்றுத் தரம்) தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை" என விண்ணப்பம் அனுப்பி வைக்கப்படும் தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் தெளிவாக குறிப்பிடப்படுதல் வேண்டும்.

(viii) விண்ணப்பம் கிடைக்கப்பெற்றமை தொடர்பில் அறிவிக்கப்பட மாட்டாது.

(ix) பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அனுமதி அட்டையினை வழங்குவதையிட்டு விண்ணப்பதாரிகள் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்துத் தேவைப்பாடுகளையும் பூர்த்திசெய்துள்ளார்கள் எனக் கருதப்படலாகாது. விதித்துரைக்கப்பட்ட கட்டணம் முறையாக செலுத்தப்பட்டுள்ளதுடன் விண்ணப்பத்தினைச் சான்றுப்படுத்துதல்/ அத்தாட்சிப்படுத்துதல் என்பன சரியாக மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும்.

அனுமதி அட்டைகள் வழங்கப்பட்டுள்ளதாக திணைக்களத்தினால் பத்திரிகை விளம்பரமொன்று பிரசுரிக்கப்படும். அனுமதி அட்டைகள் கிடைக்கப்பெறாத பரீட்சார்த்திகள் அனுமதி அட்டையில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சைத் திகதிக்கு குறைந்தது 5 நாட்களுக்கு முன்னதாக இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தின் ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைகள் பிரிவில் அது குறித்து அறிந்துகொள்ளலாம். அது தொடர்பில் அறிந்து கொள்வதற்கு பரீட்சையின் பெயர், பரீட்சார்த்தியின் முழுப்பெயர், தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம், முகவரி என்பன விசாரணையின்போது தெரிவிக்கப்படுதல் வேண்டும். விண்ணப்பதாரி கொழும்புக்கு வெளியே இருப்பவரெனில், விளம்பரத்தில் தரப்பட்டுள்ள தொலைநகல் இலக்கத்திற்கு மேற்குறித்த விடயங்களைக் குறிப்பிட்டு அனுமதி அட்டையினைப் பெறுவதற்காக விண்ணப்பதாரியின் தொலைநகல் இலக்கத்தினையும் குறிப்பிட்டு அனுப்பி வைத்தல் வேண்டும். பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பத்தின் நிழற்படப் பிரதி மற்றும் பதிவுத்தபாலின் பற்றுச்சீட்டு என்பவற்றினை வைத்திருப்பது பயனுள்ளதாகும்.

(x) பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் அங்கீகாரத்துடன் பரீட்சையினை இரத்துச் செய்வதற்கான அல்லது பிற்போடுவதற்கான அதிகாரத்தினைக் கொண்டுள்ளார்.

(xi) பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்தி குறித்துரைக்கப்பட்ட பரீட்சை மண்டபத்தின் பரீட்சை மேற்பார்வையாளரிடம் அத்தாட்சிப்படுத்திய அனுமதி அட்டையினைச் சமர்ப்பித்தல் வேண்டும். அனுமதி அட்டையினைச் சமர்ப்பிக்கத் தவறும் எவரேனும் பரீட்சார்த்தி பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதியளிக்கப்பட மாட்டார்.

அனைத்துப் பரீட்சார்த்திகளும் பரீட்சைகளினை நடாத்துவது தொடர்பில் பரீட்சைகள் ஆணையாளரினால் விதிக்கப்படும் சட்ட விதிகளுக்குக் கட்டுப்படுதல் வேண்டும். அத்தகைய சட்ட விதிகளினை மீறுவோர் அவரினால் விதிக்கப்படும் தண்டனைக்குள்ளாவார்கள்.

(xii) பரீட்சார்த்தி குறித்துரைக்கப்பட்ட பரீட்சை மண்டபத்தில் மட்டுமே பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும். ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தமது அத்தாட்சிப்படுத்தப்பட்ட அனுமதி அட்டையினைக் கொண்டுவருவதுடன் அதனை பரீட்சைக்குத் தோற்றும் முதல் நாளன்று பரீட்சை மேற்பார்வையாளரிடம் ஒப்படைத்தல் வேண்டும். அனைத்துப் பரீட்சார்த்திகளினால் அவதானிக்கப்பட வேண்டிய ஒழுங்குவிதிகளின் தொகுப்பு வர்த்தமானியில் பிரசுரிக்கப்படும்.

**குறிப்பு**.- பரீட்சார்த்திக்கு அனுமதி அட்டையினை வழங்குவதானது அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான அனைத்து தகைமைகளினையும் பூர்த்திசெய்துள்ளார் என்பதோ அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளார் என்றோ கருதப்படலாகாது.

(xiii) *பரீட்சார்த்தியின் ஆள் அடையாளம்.-* பரீட்சார்த்தியானவர் ஒவ்வொரு பாடத்திற்குமான பரீட்சையில் தோற்றும்போது மேற்பார்வையாளரிடம் தனது ஆள் அடையாளம் குறித்து திருப்திகரமாக நிரூபித்தல் வேண்டும். பின்வருவனவற்றுள் ஏதேனுமொரு ஆவணம் ஏற்றுக்கொள்ளப்படும் :

(அ) தேசிய ஆள் அடையாள அட்டை ;
(ஆ) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு.
(இ) செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரம்.

மேலும், பரீட்சார்த்திகள் அவர்களின் அடையாளத்தை நிரூபிக்கும் பொருட்டு தமது முகம் மற்றும் காது என்பவற்றினை மறைக்காது மண்டபத்தினுள் நுழைதல் வேண்டும். மேலும் தமது அடையாளத்தினை நிரூபிப்பதற்கு மறுப்புத் தெரிவிக்கும் எவரேனும் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திற்குள் நுழைவதற்கு அனுமதிக்கப்பட மாட்டார்கள். அத்துடன், பரீட்சார்த்திகள் உரிய பரீட்சை மேற்பார்வையாளர்களுக்கு தமது அடையாளத்தினை உறுதிப்படுத்தும் பொருட்டு பரீட்சை மண்டபத்தினுள் நுழைவதற்கு முன்பாகவும் மண்டபத்தினை விட்டு விலகிச் செல்லும் வரையிலுமான பரீட்சையின் முழு நேரத்திலும் தமது முகம் மற்றும் காது என்பவற்றினை மறைத்தலாகாது.

**விசேட குறிப்பு :**

(அ) ஏதேனும் ஆவணம் அல்லது ஆவணத்தின் பிரதி விண்ணப்பத்துடன் இணைக்கப்படலாகாது.

(ஆ) தேவைப்படுத்தப்படும் ஆவணங்களைச் சமர்ப்பிப்பதற்குத் தவறுகின்ற பரீட்சார்த்திகளின் விண்ணப்பங்கள் கவனத்தில் கொள்ளப்பட மாட்டாது.

ஏற்கனவே அரசாங்க சேவையிலுள்ள பரீட்சார்த்திகள் தமது விண்ணப்பங்களினை உரிய திணைக்களத் தலைவரினூடாகச் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன் அவர்களின் அனுமதி அட்டைகள் குறித்த திணைக்களத் தலைவரினாலேயே அத்தாட்சிப்படுத்தப்படுதல் வேண்டும். ஏனைய பரீட்சார்த்திகளின் விண்ணப்பப்படிவத்திலுள்ள கையொப்பமானது அரசாங்க பாடசாலையொன்றின் அதிபர், சமாதான நீதவான், சத்தியப்பிரமாண ஏற்கும் ஆணையாளர், பிரசித்த நொத்தாரிசு மற்றும் ஆயுதப்படைகளின் கட்டளையிடும் அதிகாரி, அரசாங்க சேவை அல்லது மாகாண அரசாங்க சேவையின் பதவிநிலை உத்தியோகத்தர் அல்லது பிரதம அதிகாரி அல்லது புத்த விகாரையின் தலைமை பிக்கு அல்லது வணக்கஸ்தலத்திற்குப் பொறுப்பான பதவியினை வகிக்கின்ற ஆளொருவரினால் அத்தாட்சிப்படுத்தப்படுதல் வேண்டும்.

10. இந்தப் பதவியானது அரசாங்க சேவைகள் ஆணைக்குழு மற்றும் அரசாங்க சேவை தொடர்பில் காலத்திற்குக்காலம் அரசாங்கத்தினால் வெளியிடப்படும் சட்ட நடைமுறைகளுக்குட்படுவதுடன் நிறைவேற்றுத் தர சேவை தரம் III இன் ஆட்சேர்ப்புத் திட்டத்தில் விதித்துரைக்கப்படும் நிபந்தனைகளுக்கும் அதில் மேற்கொள்ளப்படும் திருத்தங்களுக்கும் கட்டுப்படுதல் வேண்டும்.

11. நியமனத்திற்கு முன்னதாக விண்ணப்பத்தில் ஏதேனும் தவறான தகவல் வழங்கப்பட்டிருப்பது கண்டுபிடிக்கப்படின், அவரின் பரீட்சார்த்தி தகைமையானது இரத்துச் செய்யப்படும். அத்தகைய தகவலானது நியமனத்தின் பின்னர் கண்டுபிடிக்கப்படுமிடத்து அவர் சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கு/இரத்துச்செய்யப்படுவதற்கு ஆளாக நேரிடும்.

12. இந்த அறிவித்தலில் குறிப்பிடப்படாத ஏதேனும் விடயம்/ விடயங்கள் தொடர்பில் பொதுச்சேவை ஆணைக்குழுவினால் தீர்மானம் எடுக்கப்படும். அனைத்து வெற்றிடங்களையும் நிரப்புவது அல்லது பகுதியளவில் நிரப்புவது என்பது தொடர்பில் பொதுச்சேவை ஆணைக்குழுவின் தீர்மானமே இறுதியானதாகும்.

13. இந்த அறிவித்தலானது சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் பிரசுரிக்கப்பட்ட போதிலும், ஏதேனும் முரண்பாடுகள் தோன்றுமிடத்து சிங்கள மொழி மூலமான அறிவித்தலே மேலோங்கி நிற்கும்.

அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கட்டளைப்படி,

ஜே. எம். பி. ஜயவர்தன,
செயலாளர்,
கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சு.

கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சு,
கொழும்பு 3,
2021, ஏப்பிறல் 29.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**வர்த்தக அமைச்சின் நோக்கெல்லையின் கீழ் தொழிற்படுகின்ற வர்த்தக திணைக்களத்தின் உதவி வர்த்தக பணிப்பாளர் பதவிக்கு (தரம் III நிறைவேற்றுத்தரச் சேவை) ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2021**

**OPEN COMPETITIVE EXAMINATION FOR RECRUITMENT TO THE POST OF ASSISTANT DIRECTOR OF COMMERCE OF GRADE III EXECUTIVE SERVICE OF THE DEPARTMENT OF COMMERCE OF THE MINISTRY OF TRADE- 2021**

(அலுவலகப் உபயோகத்திற்கு மட்டும்)

பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் மொழி மூலம் :
(சிங்களம்-2, தமிழ்-3, ஆங்கிலம்-4)
(கூட்டினுள் உரிய இலக்கத்தினைக் குறிப்பிடுக.)

(விண்ணப்பப்படிவம் அனுப்பி வைக்கப்படும் தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் "வர்த்தக திணைக்களத்தின் உதவி வர்த்தகப் பணிப்பாளர் தரம் III (நிறைவேற்றுத்தர சேவை) பதவிக்கான விண்ணப்பம்" எனத் தெளிவாகக் குறிப்பிடப்படுதல் வேண்டும்.)

1. (i) முழுப்பெயர் (ஆங்கில முதல் எழுத்துக்களில்) :
........................................................................................................................................
........................................................................................................................................
(உதாரணம் : HERATH MUDIYANSELAGE SAMAN KUMARA GUNAWARDHANA)

(ii) முதலெழுத்துக்களுடன் குடும்பப் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :
(உதாரணம் : GUNAWARDHANA, H. M. S. K.)
........................................................................................................................................
........................................................................................................................................

(iii) முழுப்பெயர் (சிங்களம்/தமிழ்) :
........................................................................................................................................
........................................................................................................................................

2. தபால் முகவரியும் தொலைபேசி இலக்கமும் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :
........................................................................................................................................
........................................................................................................................................
(அனுமதி அட்டை இந்த முகவரிக்கு அனுப்பி வைக்கப்படும்)

3. பால் : (ஆண்-0/பெண்-1)
(உரிய இலக்கத்தினைக் கூட்டினுள் எழுதுக)

4. தேசிய ஆள் அடையாள அட்டை இல. :

5. வதிவிட மாவட்டம் :

6. நீங்கள் திருமணமானவரா ? திருமணமாகாதவரா ? விதவை/தபுதாரர் ? :

7. பிறந்த திகதியும் இடமும் :

ஆண்டு: மாதம்: திகதி:

i. பிறந்த இடம் :

ii. வர்த்தமானி அறிவித்தலின்படி, வயது :

வருடங்கள்: மாதங்கள்: நாட்கள் :

8. தேசிய இனம் :

சிங்களவர் - 1
இலங்கைத் தமிழர் - 2
இந்தியத் தமிழர் - 3
முஸ்லிம் - 4
பறங்கியர் - 5
மலாயர் - 6
ஏனையோர் - 7

(உரிய இலக்கத்தினைக் கூட்டினுள் எழுதுக)

9. (i) கல்வித் தகைமைகள் (பெற்றுக்கொண்ட அனைத்துப் பட்டப் படிப்புக்கள், சிறப்புச் சித்திகள், தொழில்சார் மற்றும் பயிற்சித் தகைமைகள், பெற்றுக்கொண்ட திகதி மற்றும் வகுப்புகளினைப் பெற்றிருப்பின் அவை பற்றியும் பெற்ற பாடங்கள் மற்றும் வழங்கிய நிறுவனங்களினைக் குறிப்பிடுக) :

| பரீட்சை/பட்டம் | வருடம் | பாடம் |
|---|---|---|
| | | |

(ii) சித்தியடைந்த உயர் பரீட்சை :

| (1) சிங்களம் | (2) தமிழ் | (3) ஆங்கிலம் |
|---|---|---|
| | | |

10. கல்விசார் தகைமைகள் (12 வயதின் பின்னர் கல்வி கற்ற பாடசாலைகள் மற்றும் கல்வி நிறுவனங்கள்) :

| கல்வி நிறுவனம்/ பாடசாலை | இருந்து | வரை |
|---|---|---|
| (1) | | |
| (2) | | |
| (3) | | |
| (4) | | |

தொழில்சார் தகைமைகள் :

| நிறுவனம் | இருந்து | வரை |
|---|---|---|
| (1) | | |
| (2) | | |
| (3) | | |
| (4) | | |

11. விளையாட்டுத் துறையில் பெற்ற சாதனைகள் அத்தகைய துறைகளில் தாங்கள் வகித்த பொறுப்புவாய்ந்த பதவிகள் :----.

12. (அ) கடன் பொறுப்பிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளீர்களா ? தங்களுக்கு கடன் பொறுப்பு இருப்பின் எவ்வளவு ? :----.

(ஆ) நீங்கள் ஏதேனும் குற்றத்திற்காக நீதிமன்றத்தில் குற்றவாளியாக காணப்பட்டீர்களா? அவ்வாறெனில், வழக்கு இலக்கம் திகதி போன்ற விபரங்களைக் குறிப்பிடுக :-

13. தற்போதைய தொழிலினையும் முன்னர் வகித்த தொழில்களினையும் குறிப்பிடுக (கடமையேற்ற திகதிகள், சேவையிலிருந்து விலகிய திகதிகள் மற்றும் இறுதியாகப் பெற்ற வருடாந்த சம்பளம்) :

| பதவி | இருந்து | வரை | வருடாந்த சம்பளம் - ரூபா |
|---|---|---|---|
| (1) | | | |
| (2) | | | |
| (3) | | | |

**மு. கு.** :- அரசாங்கத்தினால் அளிக்கப்படும் சேவை எனில், அதன் வெறிதாக்கலுக்கான காரணங்கள் கீழே 14 இல் குறிப்பிடப்படுதல் வேண்டும்.

14. விசேட தகைமைகள்: வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள விசேட தகைமைகள்/ அல்லது அனுபவங்களைக் கொண்டுள்ளீர்களா ? அவ்வாறெனில், திகதிகள் உள்ளடங்கலான அவை பற்றிய விபரங்களினைத் தருக.

15. வேறு ஏதேனும் தகவல் இருப்பின் :----.

16. பரீட்சைக் கட்டணம்:

| இந்தப் பெட்டியினுள் பற்றுச்சீட்டின் மூலப் பிரதியினை ஒட்டுக. |
|---|

(i) பற்றுச்சீட்டின் இலக்கம் :----.
(ii) பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட அஞ்சல் அலுவலகம்/உப அஞ்சல் அலுவலகம் :----.
(iii) செலுத்திய தொகை :----.
(iv) கொடுப்பனவுத் திகதி :----.

17. இந்த விண்ணப்பத்தில் தரப்பட்டுள்ள விபரங்கள் யாவும் உண்மையானதும் சரியானதுமென உறுதிப்படுத்துகின்றேன். மேலும், இந்தப் பதவித் தெரிவுக்கு முன்பாக பிழையான அல்லது தவறான தகவல் ஏதேனும் அளிக்கப்பட்டுள்ளமையானது கண்டுபிடிக்கப்படின் நான் இதற்குத் தகுதியற்றவனாவேன் என்பதனையும் தெரிவின் பின்னர் கண்டுபிடிக்கப்படுமிடத்து எவ்வித நட்டஈடுமின்றி சேவையிலிருந்து விலக்கப்படுவேன் என்பதனையும் நானறிவேன். பரீட்சையினை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகளினை வெளியீடு செய்தல் என்பன தொடர்பில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதித்துரைக்கப்பட்ட அனைத்துச் சட்ட விதிகளுக்கும் உட்பட்டு நடக்க வேண்டும் என்பதனையும் நானறிவேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

18. விண்ணப்பதாரியின் கையொப்பத்தினை உறுதிப்படுத்துதல் :
விண்ணப்பதாரியான திரு./ திருமதி/ செல்வி .................................... என்பவரை தனிப்பட்ட முறையில் நான் அறிவேன் என்பதனையும், இவர் என் முன்னிலையில் .......................... ஆந் திகதியன்று கையெழுத்திட்டுள்ளார் என்பதனையும் உரிய பரீட்சைக் கட்டணத்தினைச் செலுத்தி அதற்கான பற்றுச்சீட்டினை இதனுடன் இணைத்துள்ளார் என்பதனையும் நான் உறுதிப்படுத்துகின்றேன்.

----,
உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்.

உறுதிப்படுத்துபவரின் பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
(உறுதிப்படுத்துபவரின் உத்தியோகபூர்வ முத்திரை.
திகதி :----.

19. விண்ணப்பதாரி அரசாங்க சேவையில் பணி புரிபவராயின், விண்ணப்பதாரி தொடர்பான திணைக்களத் தலைவரின் உறுதியுரை :

மேலே பந்தி 13 இல் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் சரியானவையென/ பின்வருமாறு திருத்தி அமைக்கப்படுதல் வேண்டும் எனவும், விண்ணப்பதாரி உரிய பரீட்சைக் கட்டணத்தினைச் செலுத்தியுள்ளதுடன் அதன் பற்றுச்சீட்டினை இதனுடன் ஒட்டி

இணைத்துள்ளார் என்பதனையும் அவரின் நடத்தை ........................... என்பதனையும் உறுதிப்படுத்துகின்றேன். அவர் மேற்குறித்த பதவிக்குத் தெரிவுசெய்யப்படுமிடத்து அவரின் தற்போதைய பதவியிலிருந்து விடுவிக்கப்பட முடியும்/முடியாது.

----,
திணைக்கள/நிறுவனத் தலைவரின் கையொப்பம்.

பதவிப் பெயர் :----.
திகதி :----.

5-187

---

**அரசாங்க சேவைகள் ஆணைக்குழு**

காணி அமைச்சு

**காணி உபயோக கொள்கைத் திட்டமிடல் திணைக்களத்தின் நிறைவேற்று சேவைத் தொகுதியில் திணைக்களத்துடனான தரம் III இன் உதவிப் பணிப்பாளர் (மாவட்ட காணி உபயோகம்) பதவிக்காக ஆட்சேர்ப்புச் செய்வதற்கான மட்டுப்படுத்திய போட்டிப் பரீட்சை - 2018/(2021)**

இத்திணைக்களத்தில் நிறைவேற்று சேவைத் தொகுதியில் தரம் III இன் உதவிப் பணிப்பாளர் (மாவட்ட காணி உபயோகம்) பதவியில் நிலவுகின்ற 7 வெற்றிடங்களை நிரப்புவதற்காக பின்வரும் தகைமைகளைக் கொண்டுள்ள அலுவலர்களிடமிருந்து அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளைப்படி விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இந்தப் பரீட்சையானது பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் 2021, ஓகத்து மாதம் கொழும்பு மாவட்டத்தில் நடாத்தப்படும். இவ்வறிவித்தலின் இறுதியில் காட்டப்பட்டுள்ள மாதிரிப் படிவத்தின் பிரகாரம், விண்ணப்பங்களை பின்வரும் திகதியில் அல்லது அதற்கு முன்னர் "பணிப்பாளர், நாயகம், காணி உபயோகத் திட்டமிடல் திணைக்களம், இலக்கம் 31, பதிபா மாவத்தை, நாராஹேன்பிட்ட, கொழும்பு 05" எனும் முகவரிக்கு கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "காணி உபயோக கொள்கைத் திட்டமிடல் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் (மாவட்ட காணி உபயோகம்) பதவிக்கான மட்டுப்படுத்திய போட்டிப் பரீட்சை - 2018 (2021)" என்று தெளிவாக குறிப்பிடுதல் வேண்டும்.

(அ) விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் திகதி 2021.06.07 ஆகும்.

**குறிப்பு**.- விண்ணப்பப்படிவம் அல்லது அது தொடர்பான கடிதமொன்று தபாலில் காணாமல் போதல் அல்லது தாமதமாதல் தொடர்பாக கிடைக்கப்பெறும் முறைப்பாடுகள் கவனத்தில் கொள்ளப்பட மாட்டாது. இறுதித் திகதி வரை விண்ணப்பங்களைத் தாமதப் படுத்துவதால் ஏற்படக்கூடிய இழப்பினை விண்ணப்பதாரியே ஏற்றுக்கொள்ளப்படுதல் வேண்டும்.

1. **சேவைக்கு ஆட்சேர்ப்புச் செய்யும் முறை**.- அறிவித்தலில் காட்டப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்திசெய்கின்ற விண்ணப்பதாரிகள் எழுத்திலான பரீட்சைக்கு உட்படுத்தப்படுவார்கள். எழுத்திலான பரீட்சையில் அதிகூடிய திறமைகளைக் காட்டிய விண்ணப்பதாரிகள், வெற்றிடங்களின் எண்ணிக்கை போன்று 5 மடங்கினை ஆங்கில அகராதியின் ஒழுங்கு முறைப்படி தயாரிக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்கான பெயர் அட்டவணையைக் கொண்டு நடாத்தப்படும் அமைவு முறையிலான நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும். பின்னர் எழுத்திலான பரீட்சையிலும், நேர்முகப் பரீட்சையிலும் பெற்றுக்கொண்ட மொத்தப் புள்ளிகளின் அடிப்படையில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்றுக்கொண்ட விண்ணப்பதாரிகளிலிருந்து அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் தகைமையுள்ள விண்ணப்பதாரிகள் ஆட்சேர்ப்புச் செய்யப்படுவர்.

நியமனம் செய்யப்படும் எண்ணிக்கை மற்றும் நியமனம் நடைமுறைப்படுத்தப்படும் திகதி அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளையின்படி தீர்மானிக்கப்படும்.

2. **சம்பள அளவுத்திட்டம்**.- 2016.02.25 ஆந் திகதிய 03:2016 ஆம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கையின் 1 இன்படி இந்த பதவிக்கு ஏற்புடையதான மாதச் சம்பள அளவுத் திட்டம் ரூபா 47,615-10×1335-8× 1630-17× 2170, ரூபா 110,895, (SL-l-2016) ஆகும்.தங்களுக்கு அந்தச் சுற்றுநிருபத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக அதில் அட்டவணை II இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு சம்பளம் செலுத்தப்படும்.

3. **சேவையில் அமர்த்துவதற்கான நிபந்தனைகள்** :

(i) இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியம் உரித்துடையதுமாகும். விதவைகள், அநாதைகள் ஓய்வூதிய திட்டத்திற்கு உதவுதொகை செலுத்தல் வேண்டும் ;

(ii) இப்பதவியில் நியமனம் பெறுகின்ற அலுவலர்கள் ஓராண்டு காலத்திற்கு பதில் கடமையாற்றுவதற்கு உட்படுவார்கள் ;

(iii) அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 01/2014 இற்கும், அதனுடன் அமைந்தொழுகும் சுற்றுநிருபங்களின் பிரகாரம், பதவியில் சேர்ந்து 5 ஆண்டுகளுக்குள் அரச கரும மொழி தேர்ச்சியை ஏற்றவாறு பெற்றுக்கொள்ளுதல் வேண்டும் ;

(iv) அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நடைமுறை விதிகளுக்கும், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனவிதிக் கோவைக்கும், அரசாங்க நிதி ஒழுங்குவிதிகளுக்கும், திணைக்களத்தின் ஏனைய கட்டளைகளுக்கும் இந்த நியமனம் ஒழுங்கமையும்.

*4.* **கல்வித் தகைமைகள்**.- பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் புவியியல் அல்லது விவசாயம் தொடர்பான சிறப்பு பட்டப்படிப்பு அல்லது புவியியல் பாடத்துடன் கூடிய சாதாரண பட்டம் பெற்றிருத்தல்.

5. **அனுபவம்**.- காணி உபயோக கொள்கைத் திட்டமிடல் திணைக்களத்தில், காணி உபயோக திட்டமிடல் அலுவலர், உதவிக் காணி உபயோக திட்டமிடல் அலுவலர் அல்லது காணி பயன்பாட்டுத் திட்டமிடல் உதவியாளர் ஆகிய திணைக்களத்து பதவியில்/ பதவிகளில் ஐந்து (05) ஆண்டுகள் செயலூக்கமிக்க மற்றும் திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்திசெய்துள்ள தற்போது காணி உபயோகத் திட்டமிடல் அலுவலர் என்ற திணைக்களத்துக்கு பதவியில் சேவையாற்றும் மற்றும் சேவையில் நிரந்தரப்படுத்தியுள்ள அலுவலர்கள்

அல்லது

மேற்படி தகைமைகளைப் பூர்த்தி செய்து தற்போது அபிவிருத்தி அலுவலர் சேவைக்கு உள்ளீர்ப்புச் செய்யப்பட்டுள்ள முன்னர் திணைக்களத்துடனான பதவிகளை வகித்த அலுவலராதல் வேண்டும்.

*6.* **உடற் தகைமைகள் :**

(i) ஒவ்வொரு விண்ணப்பதாரியும் இலங்கையில் எந்தவொரு பிரதேசத்திலும் சேவையாற்றுவதற்கும்,

(ii) பதவியில் கடமைகளை நிறைவேற்றுவதற்குப் போதுமான அளவு உடல் உள ஆரோக்கியத்தையும் கொண்டிருத்தல் வேண்டும்.

7. **வயதெல்லை**.- தற்போது அரசாங்க சேவையில் ஈடுபட்டுள்ளவர்களாவதால் வயதெல்லை ஏற்புடையதாகாது.

*8.* **ஏனைய தகைமைகள் :**

(i) விண்ணப்பதாரி இலங்கைப் பிரசையாதல் வேண்டும் ;

(ii) விண்ணப்பதாரிகள் நல்லொழுக்கமுடையவர்களாக இருத்தல் வேண்டும் ;

(iii) விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் திகதியில் பதவிக்குச் ஆட்சேர்ப்புச் செய்வதற்குத் தேவையான எல்லாத் தகைமைகளையும் எல்லா வகையிலும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

*9.1* **எழுத்திலான பரீட்சை :**

*9.1.1* இப்பரீட்சை, பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் நடாத்தப்படும். பதவிக்கான மட்டுப்படுத்திய போட்டிப் பரீட்சை கீழே குறிப்பிடப்படும் வினாப்பத்திரங்களை கொண்டமைந்திருக்கும் :

| பாட இலக்கம் | பாடங்கள் | மணித்தியாலங்கள் | ஆகக்கூடிய புள்ளிகளின் அளவு | சித்தியடையும் புள்ளிகளின்அளவு |
|---|---|---|---|---|
| 1 | விடயத்துடன் தொடர்புடைய வினாப் பத்திரம் | 3 மணித்தியாலங்கள் | 100 | 40% |
| 2 | விவேகத் தேர்வு | 1 மணித்தியாலம் | 100 | 40% |

*9.1.2* பாட விதானம் :

(அ) விடயத்துடன் தொடர்புடைய வினாத்தாள்.- இவ்வினாத்தாள் மூலம் பல்வேறு மட்டங்களில் காணி உபயோகம் பொருட்டு, விஞ்ஞான முறையில் காணிகளின் உபயோகத்தை திட்டமிடல் மற்றும் பல்வேறு உபயோகங்களுக்காக நிலத்தை தர்க்க ரீதியாக பிரித்தொதுக்கும் நுட்ப முறைகள் தொடர்பான அறிவைப் பரீட்சித்துப் பார்க்கப்படும் :

(ஆ) விவேகத் தேர்வு.- சொற்கள், எண்கள், மொழி மற்றும் உருவ அமைப்புகளுடன்கூடிய மற்றும் அவற்றுக்கிடையிலான தொடர்புகளுக்கு அமைவாக சமர்ப்பிக்கப்படும் பகுப்பாய்வு, வரைவிலக்கணம், தர்க்க ரீதியான ஆற்றல் என்பவற்றை அளவிடும் பல்தேர்வு மற்றும் சுருக்கமாக பதில் அளிக்கும் வகையில் 50 வினாக்களைக் கொண்டமைந்துள்ளது.

*10.2* **நேர்முகப் பரீட்சை :**

*10.2.1 அமைவு முறையிலான நேர்முகப் பரீட்சை.- எழுத்துப் பரீட்சையில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்றுக்கொண்ட விண்ணப்பதாரிகளிடமிருந்து வெற்றிடங்களின் எண்ணிக்கை போன்று ஐந்து மடங்கினை நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவதுடன், அரசாங்க சேவை ஆணைக்குழுவால் நியமனம் செய்யப்படும் நேர்முகப் பரீட்சை சபையால் புள்ளிகள் வழங்கப்படும்.*

*அழைப்பதற்காக எழுத்துப் பரீட்சையில் ஒவ்வொரு பாடத்திற்கும் ஆகக்குறைந்தது 40% புள்ளிகளைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். நேர்முகப் பரீட்சையில் புள்ளிகள் வழங்கப்படும் முறை பின்வருமாறாகும். :*

| | பரீட்சித்துப் பார்த்து புள்ளிகள் வழங்கப்படும் துறைகள் | ஆகக்கூடிய புள்ளிகள் |
|---|---|---|
| 1 | மேலதிக கல்வித் தகைமைகள் | 20 |
| 2 | மொழித் தேர்ச்சி | 15 |
| 3 | தொழில்சார் தகைமைகள் | 20 |
| 4 | தகவல் தொழில்நுட்பம்/கணினி தொடர்பாக பெற்றுள்ள தகைமைகள் | 20 |
| 5 | மேலதிக அனுபவம் | 20 |
| 6 | நேர்முகப் பரீட்சையில் காட்டும் ஆற்றல் | 05 |
| | மொத்தம் | 100 |

*11.* **பரீட்சைக்கான நிபந்தனைகள் :**

(i) பரீட்சை சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழி மூலங்களில் நடாத்தப்படும். விண்ணப்பதாரிகள் விரும்பும் ஒரு மொழியில் பரீட்சைக்குத் தோற்றலாம். பரீட்சார்த்திகள் இப்பரீட்சையில் எல்லா வினாத்தாள்களுக்கும் ஒரே மொழியில் பதில் அளித்தல் வேண்டும். பரீட்சார்த்தி ஒருவருக்கு தமது விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிட்டுள்ள மொழி மூலத்தை மாற்றுவதற்கு அனுமதி வழங்கப்பட மாட்டாது. எல்லா பரீட்சார்த்திகளும் 2 வினாத்தாள்களுக்கும் தோற்றுதல் வேண்டும்;

(ii) பரீட்சைக் கட்டணம் ரூபா 1,200 ஆகும். பரீட்சைக் கட்டணத்தைப் பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு 20-03-02-13இற்குவரவு வைக்கும்வகையில் நாட்டில் அமைந்துள்ள எந்தவொரு அஞ்சல்/உப அஞ்சல் அலுவலகத்திற்கும் செலுத்தி விண்ணப்பதாரியின் பெயரில் பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டின் விளிம்பை விண்ணப்பப்படிவத்தில் கழறாதவாறு ஒட்டவும். குறித்த பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியை தம்வசம் வைத்துக்கொள்ளுதல் பயனுள்ளதாகும் ;

(iii) பரீட்சைக்காகச் செலுத்திய கட்டணத்தை எக்காரணம் கொண்டும் மீளச் செலுத்தப்படமாட்டாது.

(iv) இப்பரீட்சை கொழும்பு நகரத்தில் மட்டும் நடாத்தப்படும். பரீட்சை நடாத்தப்படும் திகதி பின்னர் அறிவிக்கப்படும் ;

(v) முழுமை பெறாத விண்ணப்பங்கள் அறிவிப்பின்றி நிராகரிக்கப்படும் ;

**குறிப்பு**.- அனுமதி அட்டையின்றி பரீட்சை மண்டபத்திற்குள் நுழைவதற்கு இடமளிக்கப்படமாட்டாது. பரீட்சை ஆரம்பிக்கப்படும் திகதியில் பரீட்சை நிலைய பொறுப்பதிகாரியிடம் தமது கையொப்பத்தை உறுதிப்படுத்திய அனுமதி அட்டையை மட்டும் சமர்ப்பித்தல் வேண்டும்.

பரீட்சார்த்தியொருவருக்கு பரீட்சைக்கான அனுமதி அட்டை வழங்குதலானது அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ளார் என்பதை ஏற்றுக் கொள்ளுதலாக கருதப்படுதலாகாது ;

(vi) விண்ணப்பப்படிவத்தை 22-29 செ. மீ. அளவிலான A4 கடதாசியில் இரண்டு பக்கங்களையும் பயன்படுத்தி தயாரிக்க வேண்டுமென்பதுடன், விண்ணப்பப்படிவத்தில் தலைப்பு இலக்கம் 1 தொடக்கம் தலைப்பு இலக்கம் 7.2 வரை முதலாவது பக்கத்திலும், மீதியை அடுத்த பக்கத்திலும் உள்ளடக்கி தயாரிக்கப்படுதல் வேண்டும். அதற்கான தகவல்களை தமது கையெழுத்தில் தெளிவாக உள்ளடக்குதல் வேண்டும். மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஒழுங்கமையாத விண்ணப்பங்கள் மற்றும் முழுமைபெறாத விண்ணப்பங்கள் அறிவிப்பின்றி நிராகரிக்கப்படும். உரிய விண்ணப்பப்படிவத்தின் பிரதியைத்

தம்வசம் வைத்துக்கொள்ளுதல் பயனுடையதாகும். மேலும், பூர்த்தி செய்யப்படும் விண்ணப்பப்பத்திரத்தை பரீட்சை அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கு அமைவானதா என்பது தொடர்பாக விண்ணப்ப தாரரே ஆராய்ந்து பார்த்தல் வேண்டுமென்பதுடன், அவ்வாறு அமையாத விண்ணப்பம் நிராகரிக்கப்படும் என்பதையும் மேலும் அறியத்தருகின்றேன். இத்துடன் உள்ள மாதிரிப் படிவத்திற்கு அமைவாக தயாரிக்கவும். விண்ணப்பப்படிவத்தில் தலைப்பில் காண்பிக்கப்பட்டுள்ள பரீட்சையின் பெயர், சிங்கள மொழி விண்ணப்பங்களில் சிங்கள மொழிக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும், தமிழ் மொழி விண்ணப்பங்களில் தமிழ் மொழிக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் இருத்தல் வேண்டும். ;

(vii) விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றதாக அறிவிக்கப்பட மாட்டாதென்பதுடன் பரீட்சைக்காக விண்ணப்பதாரிகளுக்கு அனுமதி அட்டை அனுப்பி வைத்தவுடன், இலங்கை பரீட்சைத் திணைக்களத்தால் அது தொடர்பாக பத்திரிகை அறிவிப்பு வெளியிடப்படும். அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சை நடைபெறும் திகதிக்கு ஆகக்குறைந்தது 5 நாட்களுக்கு முன்னராவது தமது அனுமதி அட்டை கிடைக்கப்பெறாத பரீட்சார்த்திகள் இருந்தால் அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அது தொடர்பாக இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைக் கிளையில் வினவுதல் வேண்டும். அவ்வாறு வினவும்போது விண்ணப்பதாரி, தம்வசம் வைத்துக் கொண்ட விண்ணப்பப்பத்திரத்தின் நிழற்படிப் பிரதியினையும், பதிவு செய்யப்பட்ட பற்றுச்சீட்டினையும், கொழும்பிற்கு வெளிப் பிரதேசமாயின் அனுமதி அட்டை அனுப்பி வைப்பதற்கான தொலைநகல் (பெக்ஸ்) இலக்கத்தையுளும், குறிப்பிடப்பட்ட தங்களதுகோரிக்கை கடிதத்தையும் வைத்துக்கொண்டு பரீட்சைத் திணைக்களத்திடம் அறிவித்தல் பயனுள்ளதாகும்.

(viii) அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அனுமதியின் பேரில் பரீட்சையினைப் பிற்போடுதல் அல்லது இரத்துச் செய்தல் ஆகிய அதிகாரம் பரீட்சை ஆணையாளர் நாயகத்தைச் சார்ந்திருக்கும்.

(ix) பரீட்சை நடாத்துதல் தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு பரீட்சார்த்திகள் ஒழுங்கமைதல் வேண்டும். குறித்த சட்டதிட்டங்களை மீறினால் பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் விதிக்கப்படும் தண்டனைக்கு அவர் ஆளாதலும் வேண்டும்.

(x) **பரீட்சார்த்தியின் ஆள் அடையாளம்**.- பரீட்சை மண்டபத் திற்குப் பொறுப்பானவர் திருப்தி அடையும் வகையில் எல்லாப் பரீட்சார்த்திகளும் பரீட்சை மண்டபத்தில் தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்தல் வேண்டும். அதற்கு பின்வரும் எந்தவொரு ஆவணமும் ஏற்றுக்கொள்ளப்படும்.

(i) தேசிய ஆள் அடையாள அட்டை ;
(ii) செல்லுபடியான கடவுச்சீட்டு;
(iii) செல்லுபடியான இலங்கை சாரதி அனுமதி அட்டை.

அதே போன்று பரீட்சார்த்திகள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு முடியுமான வகையில் முகம் மற்றும் இரண்டு காதுகள் தென்படும் வகையில் பரீட்சை மண்டபத்திற்கு வருகை தருதல் வேண்டும். அவ்வாறு தமது அடையாளம் உறுதிப்படுத்தலை நிராகரிக்கும் விண்ணப்பதாரிகள் பரீட்சை மண்டபத்திற்கு வருகை தருதலை அனுமதிக்கப்படமாட்டார்கள், மேலும் பரீட்சை மண்டபத்திற்கு வருகை தந்த நேரம் தொடக்கம் பரீட்சைகள் முடிவடைந்து அதிருந்து வெளியேறும் வரை பரீட்சை நடாத்தும் அதிகாரிகளுக்கு விண்ணப்பதாரியை அடையாளம் காணக்கூடியவாறு முகம் மற்றும் இரண்டு காதுகளும் தென்படும் வகையில் இருத்தல் வேண்டும்.

(xi) பரீட்சையில் தோற்றிய எல்லா விண்ணப்பதாரிகளிடமும் பெறுபேறுகளைத் தனிப்பட்ட வகையில் அறிவித்தல் அல்லது www.results.exams.gov.lk என்ற இணையத் தளத்தில் வெளியிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

அரசாங்க சேவையில்/ மாகாண அரசாங்க சேவையில் அரசாங்க கூட்டுத்தாபனங்களில் சேவையில் ஈடுபட்டுள்ள அலுவலர்களால் தமது திணைக்கள/நிறுவன தலைவர் ஊடாக விண்ணப்பங்கள் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும். பரீடசைக்குத் தோற்றுவதற்கு முன்னர் ஒவ்வொரு விண்ணப்பதாரியும் தமது கையொப்பத்தை தமது நிறுவன தலைவர் மூலம் உறுதிப்படுத்திக் கொள்ளுதல் கட்டாயமாகும். காணி உபயோக கொள்கைத் திட்டமிடல் திணைக்களத்தில் மாவட்ட செயலகங்களுக்கு இணைந்து பணியாற்றும் அலுவலர்கள் தமது மாவட்ட அலுவலகத்தின் உதவிப் பணிப்பாளர் மூலமாக (மாவட்ட காணி உபயோகம்) விண்ணப்பங்களை அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.

12. அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகளுக்கும், அவ்வப்போது அரசாங்க சேவை தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள சுற்றுநிருபங்கள், காணி உபயோக கொள்கைத் திட்டமிடல் திணைக்களத்தின் நிறைவேற்று தரத்திலான சேவைத் தொகுதிக்கான ஆட்சேர்ப்புத் திட்டம் மற்றும் அதற்கு மேற்கொண்டுள்ள திருத்தங்களின் நிபந்தனைகள் இப்பதவிக்கு ஏற்புடையதாகும்.

13. **பொய்யான தகவல்களை வழங்குதல்.-** நீங்கள் அனுப்பியுள்ள விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் தகவல்கள் பொய்யானது அல்லது தவறானது ஆட்சேர்ப்புச் செய்வதற்கு முன்னர் அறியவந்தால் உங்களது பரீட்சார்த்தத் தன்மை இரத்துச் செய்யப்படும். அவ்வாறான பொய்யான அல்லது பிழையான தகவல்கள் ஆட்சேர்ப்புச் செய்த பின்னர் அறியவந்தால் அதற்கான நடவடிக்கைகளின்கீழ் சேவையிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

14. இவ்வர்த்தமானி அறிவிப்பில் குறிப்பிடப்படாத ஏதேனும் விடயங்கள் இருப்பின் அது தொடர்பான இறுதித் தீர்மானம் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளைப்படி தீர்மானிக்கப்படும். அதே போன்று வெற்றிடங்களை நிரப்புதல் அல்லது நிரப்பாது விடுதல் அல்லது வெற்றிடங்களின் ஏதேனும் ஒரு பகுதியை நிரப்புதல் தொடர்பான இறுதித் தீர்மானம் அரசாங்க சேவை ஆணைக்குழுவைச் சார்ந்ததாகும்.

15. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் வெளியிடப்படும் இவ்வறிவித்தலில் மொழிகளுக்கிடையில் ஏதேனும் ஒவ்வாமை ஏற்படின் அச்சந்தர்ப்பத்தில் சிங்கள மொழி மூலமான அறிவித்தலின்படியே நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளைப்படி,

செயலாளர்,
காணி அமைச்சு.

"மிஹிகத்த மெதுர",
இல. 1200/6, இராஜமல்வத்த ஒழுங்கை,
பத்தரமுல்லை.
2021, ஏப்பிறல் 23.

மாதிரி விண்ணப்பப்படிவம்

(அலுவலக உபயோகத்திற்காக)

**காணி உபயோக கொள்கைத் திட்டமிடல் திணைக்களத்தின்** நிறைவேற்று சேவைத் தொகுதியில் திணைக்களத்துடனான தரம் III இன் உதவிப் பணிப்பாளர் (மாவட்டக் காணி உபயோகம்) பதவிக்காக ஆட்சேர்ப்புச் செய்வதற்கான மட்டுப்படுத்திய போட்டிப் பரீட்சை - 2018 (2021)

Limited Competitive Examination for Recruitment to the Post of Departmental Assistant Director (District Land Use), Grade III of Executive Service Category of the Land Use Policy Planning Department - 2018 (2021)

பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் :
சிங்களம்-2, தமிழ்-3, ஆங்கிலம்-4

(உரிய இலக்கத்தைக் கூட்டிற்குள் எழுதவும்)

1.0 பெயர் :

1.1 முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்தில்) :----.

(உதா : HERATH MUDIYANSELAGE SAMAN KUMARA GUNAWARDHANA)

1.2 இறுதியில் இடப்படும் பெயர் ஆரம்பத்திலும் ஏனைய பெயர்களின் முதலெழுத்துக்கள் பின்னரும் இட்டு பெயர் (ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்) :----.

(உதா : GUNAWARDHANA H. M. S. K.)

1.3 முழுப்பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :----.

2. அனுமதி அட்டை அனுப்பி வைக்க வேண்டிய முகவரி (ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்) :----.

2.1 அலுவலக முகவரி (ஆங்கில பெரிய எழுத்தில்) :----.

2.2 நிரந்தர முகவரி (சிங்களம்/தமிழ்) :----.

3. தேசிய ஆள் அடையாள அட்டை இல. : | | | | | | | | | | | | |

4. பால் :
ஆண்-0, பெண்-1 | |
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதவும்)

5. கையடக்க தொலைபேசி இலக்கம் : | | | | | | | | | | |

6. திருமணமானவரா/திருமணமாகாதவரா :
திருமணமானவர் - 1
திருமணமாகாதவர் - 2 | |
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதவும்)

7. 7.1 பிறந்த திகதி :
ஆண்டு: | | | | | மாதம்: | | | திகதி: | | |

7.2 2021.06.07 ஆந் திகதியன்று வயது :
வருடங்கள்: | | | மாதங்கள்: | | | நாட்கள்: | | |

8. ஆரம்ப நியமனத் திகதி :----.

8.1 பதவி :----.

8..2 தரம் :----.

9. பெற்றுக்கொண்டுள்ள மொழித் தேர்ச்சி :----.

10. தற்போது சேவையாற்றும் மாவட்டம் :----.

11. பெற்றுக்கொண்டுள்ள உயர் கல்வித் தகைமைகள் (பட்டநிலை பின் படிப்பு/பட்டம்/டிப்ளோமா) :----.

(பரீட்சை மற்றும் சித்தியடைந்த பாடங்கள் தொடர்பாக உரிய காலப்பகுதிகளுடன் குறிப்பிடவும்.) :

12. பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டு தொடர்பான விபரங்கள் :

12.1 பரீட்சைக் கட்டணம் செலுத்திய அஞ்சல்/உப அஞ்சல் அலுவலகம் :----.

12.2 பற்றுச்சீட்டு இலக்கமும் திகதியும் :----.

12.3 செலுத்திய தொகை :----.

| பற்றுச்சீட்டை கழராதவாறு அதன் ஒரு விளிம்பு பகுதியை இங்கு ஒட்டவும். |
|---|

இந்த விண்ணப்பப்படிவத்தில் என்னால் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் உண்மையானவையெனவும், சரியானவையெனவும் இத்தால் சான்றுப்படுத்துகின்றேன். இங்கு குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் விடயங்கள் பொய்யானதெனவோ அல்லது தவறானதெனவோ தெரிவுசெய்வதற்கு முன்னர் அறியவருமாயின், நான் தகைமையற்றவர் ஆவேன் எனவும், நியமனம் செய்த பின்னர் அறியவருமாயின் எதுவித நட்டஈடுமின்றி சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கு ஆளாவேன் எனவும் அறிவேன்.

மேலும் பரீட்சை நடாத்தல் மற்றும் பெறுபேறுகள் வழங்குதல் தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு ஒழுங்கமைவேன் எனவும் வெளிப்படுத்துகின்றேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

*13*. விண்ணப்பதாரியின் கையொப்பம் சான்றுப்படுத்தல் :

எனது அலுவலகத்தில் அலுவலரான திரு./திருமதி/செல்வி............. என்பவரை நான்தனிப்பட்ட முறையில் அறிவேன் எனவும், அவர் ................. ஆந் திகதி என் முன்னிலையில் கையொப்பமிட்டார் எனவும் இத்தால் சான்றுப்படுத்துகின்றேன்.

..................................
சான்றுப்படுத்துபவரின் ஒப்பம்.

சான்றுப்படுத்துபவரின் பெயர்: ..............................
பதவி : ......................
முகவரி : .............................
திகதி : ...................................

**14. நிறுவனத் தலைவரின் சான்றிதழ் :**

மேற்படி விண்ணப்பப்படிவத்தைச் சமர்ப்பிக்கும் அலுவலரால், சமர்ப்பிக்கும் தகவல்கள் உண்மையானதெனவும், சரியானதெனவும் உரிய பரீட்சைக் கட்டணம் செலுத்தியுள்ளதெனவும், குறித்த பற்றுச்சீட்டு ஒட்டப்பட்டுள்ளதெனவும் வெளிப்படுத்துகின்றேன்.

அவர் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கான தகைமைகளைப் பெற்றுள்ளார்/பெறவில்லை என்பதால் விண்ணப்பப்படிவத்தை பரிந்துரை செய்கின்றேன்/செய்யப்படவில்லை.

----,
பணிப்பாளர் நாயகத்தின் கையொப்பம்
மற்றும் பதவி முத்திரை.

திகதி :----.

*5-89*

**அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்குமுரிய புதிய விகிதங்கள்**
**2014 சனவரி 01 ஆந் திகதி தொடங்கி அமுலுக்கு வந்தது**
**"இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை"**
**(வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படுவது.)**

**இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.**

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் விளம்பரதாரர்களே பொறுப்பாளராவார்.

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன் **அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8** அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. அலுவலக நேரம் மு. ப. 8.30 மணி முதல் பி. ப. 4.15 மணி வரையாகும்.

4. பணம் கொடுக்கல் வாங்கல் மு. ப. 9.00 மணி முதல் பி. ப. 3.00 மணிவரை நடைபெறும்.

5. **சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படுதல் வேண்டும்.** தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித் தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகரின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும். தபால் அலுவலகம், "பொரல்லை" என்பதே காசுக் கட்டளைகளுக்கான செலுத்தப்படும் அலுவலகமாகும்.

6. **நகலைக் கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் ரைப் அடித்தல்** பிழைகளையும் காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும். கையெழுத்துப் பிரதி எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

7. **கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.**

8. வியாபார விளம்பரங்களும் பெயர் மாற்றம் பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுக்கப்பட வேண்டிய விளம்பரங்கள் 'சுப்றீம் கோட்' புறொக்டரால் கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்பட மாட்டா.

10. அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் 2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து பின்வருமாறு :-

| | ரூபா | ச. |
|---|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய | 137 | 00 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலமும் அல்லது அதன் பகுதிக்கும் | 137 | 00 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் அரைப் பக்கம் | 1,300 | 00 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் | 2,600 | 00 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. **வெள்ளிக்கிழமை தோறும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி** வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

12. **ஒவ்வொரு மாதமும் முதற்கிழமை வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம் "அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8" அவர்கட்கு சகல அறிவித்தல்களும் விளம்பரங்களும் வந்துசேர வேண்டும்.**

13. **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பெறப்படாமை, முகவரி மாற்றம் போன்ற எல்லாத் தொடர்புகளுக்கும், கொழும்பு 8, அரசாங்க அச்சுத் திணைக்களம், அரசாங்க அழுத்தகருக்கே எழுதுங்கள்.**

14. **2014 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து மீளவாய்ந்த புதிய சந்தா விபரம் :-**

| இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி (வருடத்திற்கு) | முழு வருடத்திற்கு மான கட்டணம் ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I ஆவது பகுதி : | | |
| I ஆவதுதொகுதி | 4,160.00 | 9,340.00 |
| II ஆவது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 580.00 | 950.00 |
| III ஆவது தொகுதி (ஆக்க உரிமை மற்றும் வியாபார உரிமை அடையாள விளம்பரங்கள் முதலியன) | 405.00 | 750.00 |
| I ஆவது பகுதி முழுவதும் (I, II, III தொகுதிகள் உட்பட) | 890.00 | 2,500.00 |
| II ஆவது பகுதி (சட்ட சம்பந்தமானது) | 860.00 | 450.00 |
| III ஆவது பகுதி (காணிகள்) | 260.00 | 275.00 |
| IV ஆவது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 2,080.00 | 4,360.00 |
| V ஆவது பகுதி (பயண போக்குவரத்து சேவை முதலிய விண்ணப்பங்களுக்கான பட்டியல் மற்றும் புத்தகப் பட்டியல்) | 1,300.00 | 3,640.00 |
| VI ஆவது பகுதி (யூரிமார் பெயர்ப்பட்டியல், வைத்திய அலுவலர் பட்டியல், பிறப்பு, இறப்பு பதிவாளர் பட்டியல் முதலியன) | 780.00 | 1,250.00 |
| அதிவிசேட வர்த்தமானி | 5,145.00 | 5,520.00 |

**முழு ஆண்டின் இறுதி வரைக்கும் பன்னிரண்டு மாதங்களுக்குக் குறையாத காலவெல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்படும்.**

**தனிப்பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்**

| | விலை | தபால் செலவு |
|---|---|---|
| I ஆவது பகுதி : | ரூபா ச. | ரூபா ச. |
| I ஆவது தொகுதி | 40.00 | 60.00 |
| II ஆவது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 25.00 | 60.00 |
| III ஆவது தொகுதி | 15.00 | 60.00 |
| I ஆவது பகுதி (I, II, III தொகுதிகள் உட்பட) | 80.00 | 120.00 |
| II ஆவது பகுதி | 12.00 | 60.00 |
| III ஆவது பகுதி | 12.00 | 60.00 |
| IV ஆவது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 23.00 | 60.00 |
| V ஆவது பகுதி | 123.00 | 60.00 |
| VI ஆவது பகுதி | 87.00 | 60.00 |

**எல்லா தனிப்பிரதிகளையும் கொழும்பு 5, பொல்ஹேன்கொடை, கிருளப்பனை மாவத்தை, இல. 163 எனும் முகவரியிலுள்ள அரச வெளியீட்டு பணியகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.**

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

**அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்களை ஏற்றுக்கொள்வார்.**

**முக்கிய கவனிப்பு.**- இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான கட்டணங்கள் யாவும் **அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும்.**

### அட்டவணை - 2021

| மாதம் | | வெளியீட்டு நாள் | | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|---|---|
| **மே** | .. | வெள்ளி | 07.05.2021 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 23.04.2021 |
| | | வியாழன் | 13.05.2021 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 30.04.2021 |
| | | வெள்ளி | 21.05.2021 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 07.05.2021 |
| | | வெள்ளி | 28.05.2021 | .. | நண்பகல் 12 | வியாழன் | 13.05.2021 |
| **யூன்** | .. | வெள்ளி | 04.06.2021 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 21.05.2021 |
| | | வெள்ளி | 11.06.2021 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 28.05.2021 |
| | | வெள்ளி | 18.06.2021 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 04.06.2021 |
| | | வெள்ளி | 25.06.2021 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 11.06.2021 |
| **யூலை** | .. | வெள்ளி | 02.07.2021 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 18.06.2021 |
| | | வெள்ளி | 09.07.2021 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 25.06.2021 |
| | | வெள்ளி | 16.07.2021 | .. | நண்பகல் 12 | வியாழன் | 02.07.2021 |
| | | வியாழன் | 22.07.2021 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 09.07.2021 |
| | | வெள்ளி | 30.07.2021 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 16.07.2021 |

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2021 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.